# மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2026 ஜூன் 16–30 தொகுதி 24 இதழ் 21

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200


## தமிழ்நாட்டில் இடதுசாரிகள் ஒருங்கிணைப்புக் குழு



## 'எங்களுக்கு இரங்கல் செய்திகள் எழுதுவதை நிறுத்துங்கள், நாங்கள் இன்னும் இறக்கவில்லை'

**– தோழர் திபங்கர்**

# தமிழ்நாட்டு அரசியல் சூழலில் நமது கடமைகள்

தமிழ்நாட்டு அரசியலில் நிகழ்ந்திருப்பது ஆட்சி மாற்றம்தான் என்று மட்டும் சொல்லி முடித்துவிட முடியாது. அது சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் என்ன மாற்றங்களை ஏற்படுத்தும் என மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. தவெக அரசின் செயல்பாடுகளை உன்னிப்பாக கவனித்து வருகிறோம். விரைவில் அது குறித்த மதிப்பீட்டுக்கு வர வாய்ப்பு உள்ளது.

தவெக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட்டது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை தள்ளிப்போடுவதற்காகத்தான் என்பன போன்ற கருத்துக்கள் வரத் துவங்கிவிட்டன. ஆணவக் கொலைகளும், பாலியல் வன்முறைகளும், சாதியாதிக்கத் தாக்குதல்களும் தொடர்கின்றன. சிங்கப் பெண் படை இன்னும் முழுமையான செயல்பாட்டுக்கு வரவேண்டியிருக்கிறது. திருப்பரங்குன்றத்தில் கார்த்திகை தீபம் ஏற்றுவதில், இரு மொழிக் கொள்கையில், நீட் குறித்த விசயத்தில் பழைய நிலையே தொடரும் என அரசு தெரிவித்து இருக்கிறது. நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொண்ட முதலமைச்சர் நிபந்தனையற்ற நிதி உதவி ஒன்றிய அரசு வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்டதாக தெரிகிறது. ஆனால், தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட வேண்டிய விபி–கிராம்–ஜி நிதி குறைவாகவே ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒன்றிய அரசு தமிழ்நாட்டைப் பொருளாதாரரீதியாக புறக்கணிப்பது குறித்தும், வேறு பல விசயங்களிலும், தவெக தலைமையிலான தமிழ்நாடு அரசு, மாநில உரிமைகளைக் காப்பதில் விடாப்பிடியாக நிற்குமா என்பதை சற்றுப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

அரசின் கொள்கைகள், நடவடிக்கைகள் என்ன வடிவம் எடுத்தாலும் தவெக அரசு பற்றிய நமது அணுகுமுறை என்பது அரசின் மக்கள் ஆதரவு செயல்பாட்டை வரவேற்பது, மக்கள் விரோத செயல்பாட்டை தீவிரமாக எதிர்ப்பது என்பதாகவே இருக்கும். தவெக அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றக் கோரி போராட்டங்கள் கட்டமைக்கப்பட வேண்டும். ஏற்கனவே தொழிலாளர் அரங்கில், குறிப்பாக தூய்மைப் பணியாளர் அரங்கில், அத்தகைய போராட்டங்கள் தொடங்கி விட்டன. சிபிஐஎம்எல் ஒரு புரட்சிகர ஜனநாயக எதிர்க்கட்சியாக செயல்படும்.

### மாறிவரும் அரசியல் காட்சிகள்

இந்தியா கூட்டணி கட்சிகள் இன்னமும் முயற்சித்து வருகின்றன என்றாலும், திமுக இந்தியா கூட்டணியிலிருந்து கிட்டத்தட்ட வெளியேறி விட்டது. இந்தியா கூட்டணியின் அடுத்த கூட்டத்திற்கு தவெக அழைக்கப்படும் என கூறப்படுகிறது. ஆட்சி அமைப்பு காலத்தில் காணப்பட்ட திமுகவின் அரசியல் தடுமாற்றங்கள் தொடருமா அல்லது உறுதியான பிஜேபி–அதிமுக எதிர்ப்பு தொடருமா எனும் கேள்விக்குறி இருக்கிறது. அதிமுக சிதறுண்டு கொண்டு இருக்கும் நிலையில் அதன் பயணம் எந்தத் திசையில் என்கிற கேள்விகளும் இருக்கவே செய்கின்றன.

எப்படிப் பார்த்தாலும், தமிழ்நாடு அரசியல் தட்ப–வெப்ப நிலைகளில், அணிசேர்க்கைகளில் ஒரு நிலையற்ற தன்மை நிலவுவதைக் காண்கிறோம்.

### இடதுசாரி மாற்றணி

அத்தகையதோர் அரசியல் பின்னணியில், மாறிவரும் தமிழ்நாட்டு அரசியல் சூழலின் பின்னணியில், திமுக–அதிமுக கட்சிகளின் அரசியல் பெரும் நெருக்கடியைச் சந்திக்கும் பின்னணியில், தமிழ்நாட்டின், தமிழக மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு, வலதுசாரி அரசியல் அல்ல, ஒரு போராடும் இடதுசாரி அரசியலும், இடதுசாரி மாற்றணியும்தான் என தமிழ்நாடு மாநிலக் குழு கருதுகிறது. அந்தத் திசையில், இயக்கங்களைக் கட்டமைக்க சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள கூட்டம் முடிவு செய்தது.

சிபிஐ – சிபிஐ(எம்) – சிபிஐ (எம்எல்) கட்சிகளுக்கு இடையில் சமீபத்தில் துவங்கியுள்ள பேச்சுவார்த்தையை மாநிலக்குழு வரவேற்கிறது. அது ஒரு இயக்கப்போக்கில், இடதுசாரி மாற்றணியாக வளரும் திசையில் பயணிக்கும் என நம்புகிறது. அகில இந்திய அளவிலான கூட்டு நடவடிக்கைகளோடு கூடவே, தமிழ்நாடு மாநில மக்கள் பிரச்சனைகளின் மீதும், பிரச்சனைகள் அடிப்படையிலான கூட்டு நடவடிக்கைகளை மேம்படுத்தும் அதே வேளை, தமிழ்நாடு மாநில அளவிலான இடதுசாரிகளின் ஒருங்கிணைந்த செயல்பாட்டை வளர்த்திடவும் சிபிஐ (எம்எல்) முயற்சி செய்யும்.

இந்திய நாட்டு மக்கள் பிரச்சனைகள் தீவிரமடைந்து வரும் சூழலில், பாசிச மோடி ஆட்சிக்கு எதிராக, தமிழக மக்களின் கார்ப்பரேட் எதிர்ப்பு, காவிப்பாசிச எதிர்ப்பு அரசியலை வலுப்படுத்தவும் புதிய ஆட்சியிடம் மக்கள் உண்மையாக எதிர்பார்க்கும் வாழ்வாதாரம், ஜனநாயகம் தொடர்பான கோரிக்கைகளை நிறைவேற்றிடவும், இகக (மாலெ) உறுதியாகப் போராடும்; இடது, ஜனநாயக, முற்போக்கு சக்திகளுடனும் கரம் கோர்க்கும்.

**(ஜூன் 13–14, 2026 தேதிகளில் கொடைக்கானலில் நடைபெற்ற இகக(மாலெ) தமிழ்நாடு மாநிலக் குழுவில் நிறைவெற்றப்பட்ட தீர்மானங்களில் இருந்து)**



மாலெ தீப்பொறி

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)**

**தமிழ்நாடு மாநிலக் குழுவின் அரசியல் ஏடு**

**இருவார இதழ்**
***2026 ஜூன் 16-30***
*தொகுதி 24 இதழ் 21*

முதன்மை ஆசிரியர்
***சங்கர் .வீ***

ஆசிரியர்
***ஜி. ரமேஷ்***

ஆசிரியர்குழு
***பழ. ஆசைத்தம்பி***
***பாலசுந்தரம்***
***அ. சந்திரமோகன்***
***கே. ஜி. தேசிகன்***

மேலாளர்
***சொ. இரணியப்பன்***

**1/10, 11ஆவது தெரு,**
**கருணாநிதி நகர்,**
**அயனாவரம், சென்னை - 23**


***நிர்வாக அலுவலகம்***
**3/254 பி, ஜீவா தெரு,**
**வண்டலூர்**
**சென்னை - 600048**

தொலைபேசி: **9443507067**
**9840340741**

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com

# பெண்கள்; குழந்தைகள் பாதுகாப்பு தவெக அரசின் முதன்மைப் பொறுப்பு!

பாலியல் வன்முறைகள் நடக்காத நாளே இல்லை என தமிழ்நாடு மாறிக் கொண்டிருக்கிறது. மூன்று வயது குழந்தை முதல் எண்பது வயது பாட்டி வரை பாலியல் கொடூரர்களால் கொல்லப்படுகின்றனர். கோவை சூலூரில் சிறுமி படுகொலை. தொடர்ந்து, தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டத்தில் தவெகவை சேர்ந்த பெண்ணை பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கி, சித்தரவதை செய்துள்ளார்கள் தவெகவைச் சேர்ந்தவர்கள். அந்த குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்தவர் தவெக திருவைகுண்டம் எம்எல்ஏ சரவணன். இந்த நிலையில், பாதிக்கப்பட்ட பெண்ணை தவெகவில் இருந்து நீக்குகிறார்கள். சேலத்தில், பொள்ளாச்சி போல, பெண்களை மிரட்டி ஆபாச வீடியோக்கள் எடுக்கப்பட்டுள்ளன. இதிலும் சம்பந்தப்பட்ட குற்றவாளி தவெகவைச் சேர்ந்தவர் என்கின்றன செய்திகள். காவல்துறையில் இருக்கும் பெண் காவலருக்கே பாலியல் தொல்லை. கும்மிடிப் பூண்டியில் மூன்று வயதுக் குழந்தை வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்டு முட்புதரில் வீசிக் கொலை. குழந்தையின் பெற்றோரை அடியாட்கள் சகிதம் தவெக சட்டமன்ற உறுப்பினர் மிரட்டுகிறாராம். அரசுக்கு, காவல்துறைக்கு கெட்ட பெயர் வராமல் இருக்க வழக்கம்போல் பாதிக்கப்பட்டவர்களை பலிகடா ஆக்குவதும் பொய்க்குற்றவாளிகள் கைதும் நடக்கின்றன. கும்மிடிப் பூண்டி குழந்தை கொலையில், வட மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் குற்றவாளிகள் என்று உடனடியாக அறிவிக்கப்படுகிறது. பெண்களுக்கு எதிரான சில வழக்குகளில் குற்றவாளிகள் தவெக உறுப்பினர்களாக, நிர்வாகிகளாக இருக்கிறார்கள். ஒரே நாளில் 5 குழந்தைகள் பாலியல் கொடுமைக்கு ஆளாகியுள்ளனர். கடந்த 34 நாள்களில் 207 பாலியல் குற்றச் செய்திகள் தமிழ்நாட்டை உலுக்கியுள்ளன. பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு தமிழ்நாடு அரசு ஒழுங்காக ஆட்சி நடத்தாததுதான் காரணம் என்று தேர்தலுக்கு முன்பு தவெக தலைவர் விஜய் பேசினார். இப்போது 'இது சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்டது மட்டும் அல்ல, இதில் சமூக ஒழுங்கும் சம்பந்தப்பட்டிருக்கிறது, சமூக ஒழுங்கில் தனிமனித ஒழுக்கமும் சம்பந்தப்பட்டிருக்கிறது, தனி மனிதன் ஒழுங்காக இருந்தால்தான் சமூகம் தன்னால் மாறும், கட்டுப்பாட்டுடன் பொறுப்பாக இருந்தாலே பல பிரச்சனைகளைக் கண்ட்ரோல் பண்ணலாம்' என்று முதலமைச்சர் பேசுகிறார். அதிலும் 'சிங்கப் பெண்' சிறப்பு அதிரடிப் படை துவக்க விழாவில் இவ்வாறு பேசி, தன் அரசின் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முயற்சிக்கிறார். பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் தன்னை காப்பாற்ற, சிங்கப் பெண் அதிரடிப் படை எண்ணிற்கு தொடர்பு கொண்டும் எவ்வித பலனும் இல்லை என்று பதற்றத்துடன் கூறுகிறார். கவின் கொலையில் குற்றவாளியான பெண் போலீஸை கைது செய்ததைக் கண்டித்து கயத்தாரில் ஆர்ப்பாட்டம் நடத்த காவல்துறை அனுமதி அளிக்கிறது. அதில் சாதியாதிக்க வெறியைத் தூண்டுகிற வகையிலும் ஆணவக் கொலைத் தடுப்புச் சட்டத்தை எதிர்த்தும் பேசியுள்ளனர். ஆணவக் கொலைத் தடுப்புச்சட்டத்தை விரைவில் கொண்டுவருவோம் என்று பேசிய அமைச்சர் வன்னிஅரசுக்கு கண்டனம் தெரிவிக்கின்றனர் சமூக விரோதிகள். வேடிக்கை பார்க்கிறது காவல்துறை. அடுத்த இரண்டாவது நாள், அதே கயத்தாரில் சொந்த தங்கையை, அவர் தலித் சமூகத்தைச் சேர்ந்தவரை விரும்பினார் என்பதற்காக தாயின் துணையுடன் அண்ணனே ஆணவக் கொலை செய்கிறார். இந்த கொலையைக் கண்டித்து வலைத்தளத்தில் பதிவிட்ட தலித் சமூகத்தைச் சேர்ந்தவரைக் கைது செய்கிறது காவல்துறை. தேர்தலில், 'நமது சகோதரிகளுக்கு பாதுகாப்பு' 'போதையில்லா தமிழகம்' என்று தவெக வாக்கு கேட்டது. மக்கள் மாற்றம் வேண்டியே விஜயை ஆட்சியில் அமர வைத்தனர். 'தனி மனித ஒழுக்கம்' என்று கூறி முதலமைச்சர் விஜய் தப்பித்துக் கொள்ள முடியாது. யார் மாற வேண்டும்? அரசு நிர்வாகம் மாறவேண்டும். காவல்துறை மாற வேண்டும். முதலமைச்சர் மாற்றிக் காட்ட வேண்டும். மவுனம் காக்கக் கூடாது. குற்றவாளிகள் தவெகவினர் என்றாலும் அவர்கள் மீது தலைவர் விஜயின் சிங்கப் பெண் படை சீறிப் பாயவேண்டும். 'தப்பு செய்ய நினைக்கக்கூடாது. தப்பு செய்தால் தண்டனையிலிருந்து தப்ப முடியாது' என்று பதவியேற்பு விழாவின் போது முதலமைச்சர் பேசியதை மக்கள் நம்புகின்றனர். மக்கள் நம்பிக்கையை காப்பாற்றுவதே மக்களாட்சி. வேறு விடயங்களுக்கு "கால அவகாசம்" கேட்கலாம். ஆனால், பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பில் "கால அவகாசம்" கேட்கமுடியாது. கொடூர குற்றவாளிகளிடமிருந்து அவர்களை பாதுகாப்பது தவெக அரசின் முதன்மையான, அவசரமான பொறுப்பு. கடமை. தப்பிக்க முடியாது. கூடாது.



# எங்களுக்கு இரங்கல் செய்திகள் எழுதுவதை நிறுத்துங்கள் நாங்கள் இன்னும் இறக்கவில்லை

**இகக(மாலெ) பொதுச்செயலாளர் தோழர் திபங்கர் 'நேசனல் ஹெரால்டு' ஆங்கில நாளேட்டில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்**

அசாம், மேற்கு வங்கம், கேரளா, தமிழ்நாடு, புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல் முடிவுகள், மோடியின் காலத்தில் "பாஜக வெல்ல முடியாதது" என்கிற போலி பிம்பத்திற்கு மீண்டும் வலுசேர்த்துள்ளன. அந்தப் போலி பிம்பத்துடன் சேர்த்து, தமிழ்நாட்டில் திராவிட அரசியலுக்கு அஞ்சலி என்றும், பிராந்தியக் கட்சிகளுக்கும் ஒட்டு மொத்த 'இந்தியா' கூட்டணிக்கும் கல்லறை என்றும், இடதுசாரிகளின் பழம்பெரும் பாரம்பரியத்திற்குப் புகழஞ்சலி (நினைவேந்தல்) என்றும் பல அஞ்சலிக் குறிப்புகள் நமக்கு இலவசப் பரிசாகத் தரப்படுகின்றன.

பாஜகவை வெல்லவே முடியாது என்கிற போலி பிம்பம், கடந்த 2024 பொதுத்தேர்தலில், தனிப்பெரும்பான்மைக்கு 33 இடங்கள் குறைவாக, 240 இடங்களுடன் நிறுத்திய போதே பாஜக கிட்டத்தட்ட (முற்றிலும் இல்லை என்றாலும்) அடித்து நொறுக்கப்பட்டது. ஜேடி(யு), தெலுங்கு தேசம் ஆகிய இரு பிராந்தியக் கட்சிகளின் ஆதரவால் மட்டுமே மோடி மூன்றாவது முறை ஆட்சி அமைக்க முடிந்தது. அந்தப் பகுதியளவு பின்னடைவிலிருந்து, இந்த ஆட்சியானது, "ஆட்சிக்கு எதிரான அதிர்வலைகளில்" இருந்து தேர்தல்களில் தன்னைக் காத்துக் கொள்ளுவதற்கும் சாதி, மத சமூக சிக்கலுக்குள் (Social Engineering) துல்லியமாக வேலை செய்யும் திட்டமிட்ட முறையற்ற சூழ்ச்சிகள் மூலம் தேர்தல்களில் தேவையான பெரும்பான்மையைப் பெற்றிடும் 'கலையைக்' கற்றுக் கொண்டு விட்டது. மகாராஷ்டிரா, ஹரியானா, தில்லி முதல் பீகார் வரையிலும், சமீபத்தில் அசாம், மேற்கு வங்கத்திலும் தேர்தலுக்குத் தேர்தல் இந்த உத்தி கையாளப்பட்டதைக் கண்டோம்.

2024 தேர்தலுக்குப் பிந்தைய சங்பரிவாரத்தின் இந்தத் தேர்தல் உத்திக்கு எதிரான ஒரு திறன்மிக்க எதிர் நடவடிக்கைக்காக காத்துக் கொண்டிருக்கும் வேளையில், எதிர்க்கட்சிகளுக்கு எழுதப்படும் அஞ்சலிக் குறிப்புகளுக்கு வலுவான காரணங்களுடன் மறுப்பு தெரிவிக்க வேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக, பிராந்திய கட்சிகளுக்கு எழுதப்படும் அஞ்சலிக் குறிப்புகளை எடுத்துக் கொள்வோம். தமிழ்நாட்டில் திமுக கூட்டணி பெரிய தோல்வியைச் சந்தித்துள்ளது உண்மைதான். ஆனால், அந்த இடத்தைப் பாஜகவோ அதிமுகவோ பிடித்துவிடவில்லை. மாறாக, புதிதாக எழுந்துள்ள தமிழக வெற்றிக் கழகம் நிரப்பியுள்ளது. பாஜக இப்போது 22 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் ஆட்சியில் இருக்கலாம்; ஆனால் அவற்றில் ஆறு மாநிலங்களில் அது பிராந்தியக் கட்சிகளுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொண்டுதான் ஆட்சியில் நீடிகிறது.

திமுக, திரிணாமுல் காங்கிரஸின் தோல்வி, பிராந்திய கட்சிகளின் முடிவின் துவக்கமாக முன் வைக்கப்படுகிறது என்றால், கேரளாவில் இடது ஜனநாயக முன்னணியின் (எல்டிஎப்) தோல்வியானது, இந்திய அரசியல் வரை படத்தில் இடதுசாரிகள் ஒட்டுமொத்தமாக ஒதுக்கப்பட்டுவிட்டதற்கான அடையாளமாக மிகைப்படுத்தப்படுகிறது. 1977 ஆம் ஆண்டு முதல் மேற்கு வங்கம், திரிபுரா, கேரளா ஆகிய மூன்று மாநிலங்களில் ஏதாவது ஒரு மாநிலத்தில் இடதுசாரிகள் அதிகாரத்தில் இருந்து வந்தார்கள் என்பது உண்மை. மேற்கு வங்கத்தில் தொடர்ந்து 34 ஆண்டுகள் (1977-2011), திரிபுராவில் 25 ஆண்டுகள்(1993-2018), கேரளத்தில் பத்தாண்டுகள்(2016-2026). மேற்கு வங்கம், திரிபுரா போல் இல்லாமல் கேரளா எப்போதும் தனது

அரசை ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மாற்றும் வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டது (2021 தேர்தல் மட்டும் விதிவிலக்கு). எனவே, கேரளாவில் இடதுசாரிகளின் இந்தத் தோல்வி என்பது முன்பே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். தற்போது எந்த மாநிலத்திலும் இடதுசாரி அரசாங்கம் இல்லை என்பதை வைத்து, இடதுசாரிகள் பொருத்தமற்றுப் போய் விட்டார்கள் அல்லது ‘காலாவதி’ ஆகிவிட்டார்கள் என்று பேசுவது முற்றிலும் அபத்தமானது. காங்கிரஸ் அல்லாத கட்சி ஆட்சி அதிகாரத்திற்கு வந்தது என்றால் கம்யூனிஸ்ட்டுகள்தான் முதலாவதாக வந்தார்கள். 1977 வரை இயக்கம் சார்ந்த எதிர் நீரோட்டமாக இடதுசாரிகள் இருந்தார்கள்.

தேர்தல் அடிப்படையில், ஒரு மாநிலத்தில் இடதுசாரிக் கட்சி அதிகாரத்தை இழந்தது குறித்து அதிகம் கவலைப்படாமல் இதுவரை கணிசமான அளவு அடித்தளத்துடன் செல்வாக்கு செலுத்தி வந்த மாநிலத்தில் வாக்கு சதவீதத்தில் ஏற்பட்டுள்ள சரிவு பற்றியே கவலைப்பட வேண்டும்.

அந்த வகையில், சிபிஐ(எம்) தலைமையிலான இடது முன்னணி மேற்கு வங்கத்தில் பெரும் சரிவைச் சந்தித்திருக்கிறது. 2011 இல் பெற்ற 41 சதவீத வாக்குகளிலிருந்து, தற்போதைய சமீபத்திய தேர்தலில் வெறும் 5 சதவீதமாகக் குறைந்துள்ளது. 2011 இல் இடதுசாரிகளின் தோல்வியானது, 34 ஆண்டுகால நீண்ட ஆட்சி மற்றும் தொழில்மயமாக்கல் என்ற பெயரில் மக்கள் விருப்பத்திற்கு மாறாக நிலம் கையகப்படுத்தப்பட்டதால் இடதுசாரிகளின் கிராமப்புற அடித்தளத்தில் பெரும் சிதைவும் அரிப்பும் ஏற்பட்ட பின்னணியில்தான் என்பது முற்றிலும் புரிந்து கொள்ளக்கூடியது. ஆனால், 2016 இல் வெறும் 10 சதவீத வாக்குகளுடன் 3 இடங்களை பெற்று இருந்த பாஜக, 2026 தேர்தலில் திடீரென எழுந்து 46 சதவீத வாக்குகளையும் 208 இடங்களையும் பெற்று மேற்கு வங்கத்தில் ஆட்சியைப் பிடித்துள்ளது என்பது சிபிஐ(எம்)க்கு மட்டுமின்றி ஒட்டுமொத்த இடதுசாரிகளுக்கும் பெரும் கவலையளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

மேற்கு வங்க அரசியலின் ஓரஞ்சாரமாக இருந்த பாஜக பத்தே ஆண்டுகளில் மையப் பகுதிக்கு வந்துள்ளது. வாக்காளர்பெயர் நீக்கம், தேர்தல் தில்லுமுல்லுகள் மூலம் 2026 தேர்தல்களில் பாஜக பெரும் வெற்றி பெற்றது என்றாலும் கூட மிகவும் கவனிக்கப்பட வேண்டியது மேற்கு வங்கத்தில் இன வெறுப்பு, மதவெறி, பிரித்தாளும் சூழ்ச்சி கொண்ட சங் பரிவாரின் நச்சுத்தன்மை வாய்ந்த தத்துவம் திட்டமிட்டு பரப்பப்பட்டதும் காரணமாகும். இது பற்றி இடதுசாரிகள் மட்டுமின்றி பகுத்தறிவும் முற்போக்குச் சிந்தனையும் கொண்ட ஒவ்வொரு இந்தியரும் கவலைப்பட்டாக வேண்டும்.

கொல்கத்தாவில் பாஜக அதிகாரத்திற்கு வந்த முதல் மாதத்திலேயே மேற்கு வங்கத்தில் அரங்கேற்றப்பட்டு வரும் காட்சிகளை மேலோட்டமாகப் பார்த்தாலே, அது சங்பரிவாரம் தனது கொடூர நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதில் காட்டும் அதீத அவசரம் பற்றி நமக்குச் சொல்லும்.

கிராமப்புறப் பொருளாதாரத்தின் மீது கடுமையான அடியைக் கொடுக்கும் பசுவதைத் தடையிலிருந்து, மறு வாழ்வுக்கான மாற்று ஏற்பாடுகள் ஏதுமின்றி நடைபாதை வியாபாரிகளை, ரயில் நிலைய சிறு வியாபாரிகளை ஈவிரக்கமின்றி அப்புறப்படுத்துவது வரை; எதிர்க்கட்சித் தலைவர்கள், எதிர்க்கட்சி அலுவலகங்கள் மீது வன்முறைத் தாக்குதல்களைத் தொடுப்பது முதல் தலைவர்களின் சிலைகள், நினைவிடங்களை, கடைகளைத் தரைமட்டமாக்குவது வரை; ஆதரவற்ற மக்களை ‘பாதுகாப்பு மையங்கள்’ என்கிற சிறையில் மந்தைகள் போல் அடைத்து வைப்பது என அராஜகம் நீள்கிறது. மேற்கு வங்கத்தில் வந்திருப்பது ‘மாற்றம்’ அல்ல; அராஜகமும் வன்முறையும் நிறைந்த ஆட்சியாகும்.

வங்கத்தின் முற்போக்கு பாரம்பரியத்தை, பரந்த மனப்பான்மையை, பன்முகக் கலாச்சாரத்தை தலைகீழாக மாற்றும் முயற்சியே இது என்பது தெளிவாகத் தெரிகிறது.மேற்கு வங்கத்தின் புதிய வெற்றியாளர்களுக்கு இந்த அதிகாரம் என்பது தணியாத பழிவாங்கும் வெறியும்

ஆக்கிரமிப்பும் தானேயன்றி பொறுப்பிற்கோ அல்லது கடமையாற்றுவதற்கோ அல்ல; வங்கத்தை கிழக்கிந்தியக் கம்பெனி கைப்பற்றி, நிலப்பிரபுத்துவ சக்திகளுடன் சேர்ந்து ‘நிரந்தர குடியேற்றம்’ ஏற்படுத்தியதன் மூலம், இந்தியாவில் காலனிய ஆட்சிக்கு கட்டியம் கூறியதென்பதை வரலாறு நமக்கு நினைவூட்டுகிறது. வங்கத்தைப் பாஜக கைப்பற்றியிருப்பதும் அதையொத்ததுதான். இது வெறும் அரசியல் - கலாச்சார ஆக்கிரமிப்பை மட்டுமே குறிக்கவில்லை. இன்றைய ‘மேற்கிந்திய கம்பெனி’க்கு (பெரு முதலாளிகளுக்கு) புதிய ‘நிரந்தர குடியேற்றம்’ ஏற்படுத்திக் கொடுப்பதற்கான வாய்ப்பையும் குறிக்கிறது. சிறு வணிகங்கள் மீது, மக்களின் வாழ்வாதாரங்களின் மீது நடத்தப்படும் தாக்குல்கள், வாக்குரிமைகள் பறிப்பு, உரிமைகள் பறிப்பு அலைகளுக்கு மத்தியில், வளங்களைக் கையகப்படுத்தி, சொத்துக்களைக் குவித்து முன்னேறிவரும் கார்ப்பரேட்டுகளின் காலடியோசை கேட்பதில் சிரமம் எதுவுமில்லை.

சங்பரிவாரத்தைப் பொறுத்தவரை, மேற்கு வங்கம் அவர்கள் நீண்ட காலமாகக் காத்திருந்த ‘கடைசி எல்லை’ ஆகும். வங்கத்தில் பாஜக பெற்ற இந்த வெற்றியின் மூலம் வங்கதேசத்தைச் சுற்றியுள்ள பாஜக ஆளும் மாநிலங்களான திரிபுரா, மேகாலயாவிலிருந்து அசாம், மேற்கு வங்கம் வரையிலான சங்கிலி இணைக்கப்பட்டுவிட்டது. மேலும், அது பீகார், மேற்கு வங்கம், ஒடிசா ஆகிய மூன்று மாநிலங்களிலும் பாஜகவின் முதலமைச்சர்களைக் கொண்டு வந்து ‘அங்க-பங்க-கலிங்க’ வளையத்தையும் இணைத்து விட்டார்கள்.

இதனால் துணிவு பெற்றுள்ள பாஜக, இனி தனது 'ஒரே தேசம், ஒரே கட்சி' என்கிற பயணத்தின் வேகத்தை அதிகரிக்கும்.

தொகுதி மறுவரையறை, 'ஒரே தேசம், ஒரே தேர்தல்' ஆகியவை, இந்திய தேர்தல் அமைப்பு முழுவதையும் பாஜகவின் கொடிய பிடிக்குள் இறுக்கிக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டதாகும். இருப்பினும், நாட்டின் பொருளாதாரம், ஆட்சி நிர்வாகம், சர்வதேச உறவுகள் ஆகியவற்றைப் பார்த்தால், மோடி அரசாங்கம் அதலபாதாளத்திற்குள் போய்விட்டது என்பது தெளிவாகத் தெரியும். மோடி ஆட்சிக்கு ஆதரவாக மிக நேர்த்தியாகப் பேசி வந்தவர்களாலும் கூட இனிமேலும் மறுக்க முடியாத நிலை உருவாகிவிட்டது.

இந்த பன்மடங்கான நெருக்கடிகளையும் இந்த அரசாங்கம் எப்படி சமாளிக்கிறது? அது புல்டோசர் நடவடிக்கையை மேலும் தீவிரப்படுத்துகிறது. நியாயமான கூலிக்காகப் போராடும் தொழிலாளர்களைச் சிறையிலடைக்கிறது. தேர்வு முடிவுகளை மறுமதிப்பீடு செய்யக் கோரும் மாணவர்களை 'பாகிஸ்தானியர்' என்று முத்திரை குத்துகிறது.

இந்திய தலைமை நீதிபதியால் சமூக செயற்பாட்டாளர்கள் 'கரப்பான் பூச்சிகள்' என்று அழைக்கப்படுகின்றனர். இதனால் கோபமுற்ற இந்திய இளைஞர்கள், சமூக ஊடகங்கள் வாயிலாக 'கரப்பான் பூச்சி ஜனதா கட்சி' யை உருவாக்கித் திருப்பித் தாக்கும் போது, நிலை குலைந்து போன அரசு அவர்களின் சமூக ஊடகப் பக்கங்களை முடக்குகிறது.

இந்தியாவில் கடந்த நூறு ஆண்டுகளாக, கம்யூனிஸ்ட்டுகள்தான் சுதந்திரத்திற்காக, நீதிக்காக, மக்கள் உரிமைகளுக்காக துடிப்புடனும் அர்ப்பணிப்புடனும் இடைவிடாது குரல் கொடுத்து வருகின்றனர். முன்னெப்போதையும் விட இன்று, இந்திய ஜனநாயகத்திற்கு, சூழலுக்கேற்ப செயல்படவும் அடிமட்டத்திலிருந்தே இரண்டாவது விடுதலைப் போராட்டத்தைக் கட்டமைக்கவும் இந்தியக் கம்யூனிஸ்டுகள்தான் தேவைப்படுகின்றனர்.

இடதுசாரிகள் புத்துயிர் பெறுவதும் ஜனநாயகம் உயிர்ப்புடன் இருப்பதும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள் ஆகும்!

## சிபிஐ– சிபிஐஎம்– சிபிஐஎம்எல் லிபரேசன்
## இடதுசாரி கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) விடுதலை ஆகிய இடதுசாரி கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் 17.06.2026 அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில தலைமை அலுவலகமான பாலன் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு. வீரபாண்டியன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) விடுதலை மாநிலச் செயலாளர் பழ. ஆசைத்தம்பி ஆகியோர் தலைமை தாங்கினர். கூட்டத்தில் இந்தியா மற்றும் தமிழ்நாட்டின் அரசியல் வளர்ச்சிப் போக்குகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. தமிழ்நாட்டு மக்கள் எதிர்கொள்ளக் கூடிய முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக மூன்று இடதுசாரிக் கட்சிகளும் கூட்டாக செயல்படுவதெனவும் வர்க்க, வெகுமக்கள் அமைப்புகளின் ஒருங்கிணைந்த மேடையை உருவாக்குவது எனவும் முடிவு செய்யப்பட்டது. இளைஞர், மாணவர், பெண்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவது எனவும் இடதுசாரி ஒருங்கிணைப்புக் குழுவிற்கு, மக்களின் முக்கியக் கோரிக்கைகளை முன்வைத்து பொதுவான வேலைத் திட்டத்தை உருவாக்குவது என வும் முடிவு செய்யப்பட்டது.

12 பேர் கொண்ட ஒருங்கிணைப்பு குழு உருவாக்கப்பட்டது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மு.வீரபாண்டியன், டி.எம். மூர்த்தி, நா. பெரியசாமி, எம். ரவி ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பில் பெ.சண்முகம், பி.சம்பத், என். குணசேகரன், கா.சாமுவேல்ராஜ் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) விடுதலை சார்பில் பழ. ஆசைத்தம்பி, பாலசுந்தரம், சந்திரமோகன், ஜானகிராமன் இணைக்கப்பட்டுள்ளனர். ஒருங்கிணைப்பு குழுவிற்கான குறைந்தபட்ச வரைவு செயல்திட்டத்தை தயாரித்து அடுத்தக் கூட்டத்தில் ஒப்புதலுக்காக முன்வைப்பது எனவும் ஜூலை மாதம் 20 ஆம் தேதி இந்த ஒருங்கிணைப்பு குழுவின் அடுத்தக் கூட்டத்தை நடத்துவது என்றும் இடதுசாரி கட்சிகளின் வர்க்க வெகுமக்கள் அமைப்புகளின் விரிவடைந்த கூட்டத்தை ஜூலை 10 ஆம் தேதி சென்னையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்தில் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. குறைந்த பட்ச செயல் திட்டம் மற்றும் மக்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி செப்டம்பர் மாதம் இறுதியில், இடதுசாரி கட்சிகளின் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் பிரம்மாண்ட பேரணி மற்றும் பொதுக் கூட்டத்தை நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

இடதுசாரி கட்சிகளின் ஒருங்கிணைப்புக்குழு என்பது தேர்தலுக்கான கூட்டணி அல்ல. மக்கள் பிரச்சினைகளுக்கு போராடுவதற்கான, தமிழ்நாட்டின் எதிர்கால திசை வழியை இடதுசாரிகளின் பக்கம் திருப்புவதற்கான, மாற்று அரசியல் திசைவழியைப் பற்றி விழிப்புணர்வு ஊட்டுவதற்கான இயக்கமாகும். இன்றைய முதலாளித்துவ சமூகப் பொருளாதார அமைப்புக்கு மாற்று சோசலிசம்தான் என்ற நம்பிக்கையை உருவாக்கும் வகையில் இடதுசாரி கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழு செயல்படும்.

கூட்டத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாநிலத் துணைச் செயலாளர் என்.பெரியசாமி, எம்.ரவி, தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி, மாநில செயற்குழு உறுப்பினர்கள் பி.பத்மாவதி, டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பில் மத்தியக்குழு உறுப்பினர் பி.சம்பத், மாநில செயற்குழு உறுப்பினர்கள் என். குணசேகரன், கா.சாமுவேல் ராஜ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) விடுதலை சார்பில் மத்திய கமிட்டி உறுப்பினர்கள் பாலசுந்தரம், சந்திரமோகன் மற்றும் மாநில குழு உறுப்பினர்கள் இரணியப்பன், புவனா, ஜானகிராமன், எம். கோபால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஈரான் போரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நெருக்கடியும்

– அரிந்தம் –

உலகெங்கிலும் உள்ள பல பொருளாதாரங்களைச் சீர்குலைத்த வர்த்தகப்போருக்குப் (Tariff War) பிறகு, வெனிசுலா ஜனாதிபதியை சிறைப்பிடித்து டிரம்ப் அந்த நாட்டின் மீது தாக்குதல் நடத்தினார். மேலும் ஈரானின் உச்சத் தலைவரைக் கொன்று ஒரு போரைத் தொடங்கினார். வெனிசுலா அரசாங்கம் சரணடைந்து அமெரிக்காவுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது, ஆனால், ஈரான் அவ்வாறு செய்யவில்லை. ஈரான் மத்திய கிழக்கு முழுவதும் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது கடுமையான தாக்குதல்களை நடத்தியும் ஹார்முஸ் நீரிணையை முடக்கியும் பதிலடி கொடுத்தது.

**அமெரிக்காவின் பலவீனம்**

கடந்த இரண்டு மாத காலப் போர் அமெரிக்காவின் நிதி மற்றும் இராணுவ பலவீனத்தை வெளிப்படுத்தியுள்ளது. அமெரிக்கா தனது பாரம்பரிய ஐரோப்பிய நட்பு நாடுகளிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளது, மேலும் நேட்டோ (NATO) கூட்டணியின் இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது. பல்வேறு ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவின் தாக்குதல்களுக்கு தங்களின் தளங்களைப் பயன்படுத்துவதைத் தடுத்தது மட்டுமின்றி, அவர்களில் சிலர் சியோனிச ஆக்கிரமிப்பாளர்களை இக்காலத்தின் நாஜிக்கள் என்றும் குற்றம் சாட்டியுள்ளனர். தங்களது பாதுகாப்பிற்காக அமெரிக்காவைச் சார்ந்திருக்கும் வளைகுடா நாடுகள், தென் கொரியா, ஜப்பான் ஆகியவை இனி எதிர்காலத்திலும் அதைத் தொடர முடியுமா என்ற கவலையில் ஆழ்ந்துள்ளன.

நிதி ரீதியாக, அமெரிக்கா இதுவரை சுமார் 60 பில்லியன் டாலர்களைச் செலவிட்டுள்ளது. போர்நிறுத்தம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு 38 நாட்கள் நீடித்த இந்த மோதலின் ஒட்டுமொத்த நிதிச் செலவு 28 பில்லியன் டாலர் முதல் 35 பில்லியன் டாலர் வரை (நாளொன்றுக்கு சுமார் 1 பில்லியன் டாலர்) இருக்கும் என இரண்டு சுதந்திரமான குழுக்கள் மதிப்பிட்டுள்ளன. ஏப்ரல் 2026 நிலவரப்படி, 2027 ஆம் நிதியாண்டிற்கான பாதுகாப்பு பட்ஜெட்டிற்கு ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இதுவரை இல்லாத அளவிலான 1.5 டிரில்லியன் டாலர்களைக் கோரியுள்ளார், இது சுமார் 40% முதல் 44% வரையிலான அதிகரிப்பாகும்.

இராணுவ ரீதியாகப் பார்த்தால், அமெரிக்காவின் ஏவுகணை இருப்பில் ஏறக்குறைய பாதி பயன்படுத்தப்பட்டுவிட்டது, ஏவுகணை இருப்பை மீண்டும் நிரப்புவதற்கு குறைந்தது 3 ஆண்டுகள் ஆகும் என்று இராணுவ நிபுணர்கள் கூறுகின்றனர். அமெரிக்க இராணுவப் பாதுகாப்பு அமைப்பின் வலிமை பலவீனமடைந்துள்ளது. பல பில்லியன் டாலர் மதிப்பிலான பல்வேறு போர் விமானங்கள், வளைகுடாவில் உள்ள ரேடார் நிலையங்கள், மற்றும் நீண்ட காலமாக உருவாக்கப்பட்ட இராணுவத் தளங்கள் ஈரானின் எதிர் தாக்குதலில் அழிக்கப்பட்டுள்ளன.

இந்த அதிகரித்த நிதிச்சுமை அமெரிக்கப் பொருளாதாரத்தைப் பாதித்துள்ளது. அமெரிக்காவில் பொருட்களின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. டிரம்பின் கொள்கைகளுக்கு எதிராக அமெரிக்காவில் உள்ள உழைக்கும் மக்கள் லட்சக்கணக்கில் வீதிகளில் இறங்கிப் போராடி வருகின்றனர். டிரம்பின் ஆதரவாளர்களிடையேயும் அதிருப்தி வளர்ந்து வருகிறது.

மேற்கு ஆசியாவைப் பொறுத்தவரை, காசாவில் நடக்கும் போரினால் இஸ்ரேலின் பொருளாதாரம் ஏற்கனவே அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளது. தற்போதைய போரின் காரணமாக பொருளாதார வளர்ச்சியில் 3.5% குறைவு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இராணுவ ரீதியாகவும் அது தனது ஏவுகணை இருப்புகளில் பெரும்பாலானவற்றைத் தீர்த்துவிட்டது. இராணுவத்தில் 12,000 வீரர்கள் பற்றாக்குறை உள்ளது, இது விரைவில் இன்னும் அதிகரிக்கலாம். நெதன்யாகு கோருவது போல் ஹிஸ்புல்லாவை இராணுவத்தால் நிராயுதபாணியாக்க முடியாது என்று இஸ்ரேலிய இராணுவத் தளபதியே வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க-இஸ்ரேல் அச்சின் ஒட்டுமொத்த நிலைமை இதுதான். ஈரானிலும் பெரிய அளவிலான அழிவுகள் நிகழ்ந்துள்ளன. அதன் எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி நிலையங்கள், மருத்துவ நிறுவனங்கள், மருத்துவமனை உள்கட்டமைப்புகள், கல்வி நிறுவனங்கள் போன்ற பல அழிக்கப்பட்டுள்ளன, 3000-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வளவு அழிவுகள் ஏற்பட்ட போதிலும், அமெரிக்க-சியோனிச ஆக்கிரமிப்பாளர்கள் தங்களது போர் நோக்கங்களை நிறைவேற்றுவதை ஈரான் வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்தியுள்ளது.

**இலக்குகளை மாற்றுதல்**

போரின் தொடக்கத்தில், ஈரானில் ஆட்சி மாற்றமே போரின் நோக்கம் என்று டிரம்ப்

கூறினார். இது சாத்தியமில்லை என்பதை உணர்ந்ததும், அவர் தனது இலக்குகளை மாற்றத் தொடங்கினார். செறிவூட்டப்பட்ட யுரேனியத்தைக் கைப்பற்றுவது என்றும், பின்னர் ஏவுகணை இருப்புகளையும், ஏவுகணைகளை உற்பத்தி செய்யும் திறனையும் அழிப்பது என்றும் அறிவிக்கப்பட்ட நோக்கங்கள் மாறின. இதற்கிடையில் அமெரிக்காவும் சியோனிச காலனித்துவவாதிகளும் பெரும் இழப்புகளை சந்தித்தனர். போரின் தாக்கத்தைப் பரப்பவும், அதனை ஒரு உலகளாவிய பிரச்சனையாக மாற்றவும், ஈரான் மிக முக்கிய உத்தியாக ஹார்முஸ் நீரிணையை வெற்றிகரமாக முடக்கியது. இந்த சமச்சீரற்ற போரில், ஈரான் அதனை நீட்டித்து தனது எதிரியை பலவீனப்படுத்தவும், அமைதி ஒப்பந்தத்தின் மூலம் போரை முடிவுக்குக் கொண்டுவர அவர்களை வற்புறுத்தவும் முயற்சிக்கிறது. பாகிஸ்தானில் நடந்த அமைதிப் பேச்சுவார்த்தைகள் முட்டுக்கட்டையில் முடிந்தாலும், தார்மீக ரீதியாக ஈரானே முதன்மை நிலையில் உள்ளது.

**மாறியுள்ள உலக ஒழுங்கு**

அமெரிக்காவுடன் ஒப்பிடுகையில், பொருளாதாரத் துறையில் சீனாவின் முன்னேற்றம் வியக்கத்தக்க வகையில் உள்ளது. செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் (AI tech), தகவல்தொடர்பு, ரோபாட்டிக்ஸ், எலக்ட்ரானிக் பேட்டரிகள், பசுமை ஆற்றல் ஆகியவற்றில் அது முன்னணியில் உள்ளது, மேலும் பல முக்கியமான தொழில்நுட்பத் துறைகளில் அமெரிக்காவை முந்தியுள்ளது. ஆழ்கடல் சுரங்கம் மற்றும் விண்வெளித் தொழில்நுட்பங்கள் போன்ற வளர்ந்து வரும் துறைகளில் கூட, அமெரிக்கா பெருமளவு பின்தங்கியுள்ளது. தென் அமெரிக்காவின் மிகப் பெரிய வர்த்தகப் பங்காளியாக சீனா உருவெடுத்துள்ளது. இரயில்வே, துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் போன்ற முக்கிய உள்கட்டமைப்புகளின் கட்டுமானத்தை சீன மூலதனம் இயக்குகிறது; அதே வேளையில் அரிய வகை பூமிக் கனிமங்கள் (rare earths) மற்றும் பிற மூலோபாய கனிமங்கள் மீதான தனது கட்டுப்பாட்டையும் அது சீராக விரிவுபடுத்தி வருகிறது. சீன நாணயம் யுவானின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது.

இராணுவத் துறையிலும் சமநிலை மாறி வருகிறது. சீனா ஒரு வலிமையான படையை உருவாக்கி வருவதோடு, அமெரிக்காவை விட ஐந்து முதல் ஆறு மடங்கு வேகமாக ஆயுதங்களை உற்பத்தி செய்து வருகிறது. பெருமளவிலான 'மூன்றாம் உலக' நாடுகளை தனது விரிவான பெல்ட் மற்றும் ரோடு (Belt and Road) திட்டத்தில் இணைத்து, ஒப்பீட்டளவில் பலவீனமடைந்து வரும் அமெரிக்காவிற்கு எதிராக, வளர்ந்து வரும் ஒரு ஏகாதிபத்திய சக்தியாக தனது நிலையை அது வலுப்படுத்தி வருகிறது. ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான அதிகரித்து வரும் முரண்பாடு மற்றும் நேட்டோவின் இருப்பு குறித்த கேள்விக்குறியையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**இந்தியாவின் நிலைப்பாடு**

இங்கு இந்தியாவின் நிலைப்பாடு மிகவும் நிலையற்றதாக உள்ளது. ஒருபுறம் ஏகாதிபத்தியப் பொருளாதாரங்களுக்கு அது அடிபணிந்து கிடப்பதாலும், மறுபுறம் பல-துருவ உலக அமைப்பால் இந்தியாவுக்கு பேரம் பேசும் வாய்ப்பு கிடைப்பதாலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள பெரிய சந்தை, மலிவான உழைப்பு மற்றும் இயற்கை வளங்களை ஏகாதிபத்தியவாதிகள் குறிவைக்கின்றனர். இருப்பினும், ஏகாதிபத்திய சக்திகளுக்கு இடையே அதிகரித்து வரும் முரண்பாடுகள் இந்த இடைவெளியைச் சுருக்கும். இந்தியா தீர்க்கமாக ஒரு முகாமைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கும்.

அமெரிக்காவின் வர்த்தக கட்டணங்களுக்கு (tariffs) இந்தியா முழுமையாகச் சரணடைவதையும், அமெரிக்க-சியோனிச முகாமுக்கு பகிரங்கமாக ஆதரவளிப்பதையும் நாம் ஏற்கனவே பார்த்து வருகிறோம். பயங்கரவாத அமெரிக்காவால் மினாப்பில் 168 பள்ளி மாணவிகள் மனிதாபிமானமற்ற முறையில் கொல்லப்பட்டதைக் கூட இந்தியா கண்டுகொள்ளவில்லை. பாகிஸ்தான் மத்தியஸ்தராக இருக்கும் ஒரு சூழ்நிலையில், மோடியின் "விஸ்வகுரு" வாய்வீச்சு அவமானப்பட்டு நிற்கிறது.

இந்தியாவின் சரணடைவை, அமெரிக்காவின் மீதான அதன் பொருளாதாரச் சார்புநிலையின் வெளிச்சத்தில் பார்க்க வேண்டும். இந்தியாவின் மிகப் பெரிய ஏற்றுமதி இலக்கு அமெரிக்காவாகும். அந்நிய நேரடி முதலீட்டைப் (FDI) பொறுத்தவரை, மொரீஷியஸ் (182.2 பில்லியன் டாலர்) மற்றும் சிங்கப்பூருக்குப் (179.48 பில்லியன் டாலர்) பிறகு, அமெரிக்கா மூன்றாவது இடத்தில் (76.26 பில்லியன் டாலர் - ஏப்ரல் 2000 முதல்) உள்ளது. சிங்கப்பூர் மற்றும் மொரீஷியஸில் இருந்து வரும் முதலீடுகளில் பெரும் பகுதி, அடிப்படையில் வரியைத் தவிர்ப்பதற்காக திருப்பி விடப்படும் அமெரிக்கா மற்றும் பிற மேற்கத்திய நாடுகளின் முதலீடுகளே என்பது அனைவரும் அறிந்ததே. இந்தியாவின் மொத்தப் பன்முகக் கடன்கள் (multilateral loans) 80.77 பில்லியன் டாலர்களாகும். இதில் 38% அமெரிக்காவால் கட்டுப்படுத்தப்படும் உலக வங்கி மற்றும் ஐஎம்எஃப் (IMF)-லிருந்து வருகிறது; ஜப்பான் மற்றும் அமெரிக்காவால் கட்டுப்படுத்தப்படும் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) இரண்டாவது இடத்தில் உள்ளது. அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடான ஜப்பான், மிகப் பெரிய இருதரப்பு கடன் வழங்குநராக உள்ளது.

### தொழிலாள வர்க்கத்தின் மீதான தாக்கம்

இந்த மோதலின் மிகப் பெரிய சுமையை, குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளில் உள்ள தொழிலாளர் வர்க்கமே சுமக்கிறது. எரிசக்தி விநியோகத்தில் ஏற்பட்ட இடையூறு எரிவாயு (LPG) நெருக்கடியைத் தூண்டி சிலிண்டர் விலைகளை உயரச் செய்துள்ளது. சூரத்தில் உள்ள ஜவுளித் துறையில் மட்டும், தொழிற்சாலைகள் தங்களது செயல்பாடுகளைக் குறைத்ததால், சுமார் 1,50,000 தொழிலாளர்கள் (மொத்தத் தொழிலாளர் தொகுப்பில் 30%) தங்களது கிராமங்களுக்குத் திரும்பியுள்ளனர். ஒரு முக்கிய பீங்கான் உற்பத்தி மையமான மோர்பியில், ஆலை மூடல்கள் மற்றும் பணிநீக்கங்கள் காரணமாகத் தொழிலாளர்கள் அடிப்படைத் தேவைகளைக் கூட வாங்க முடியாத நிலையில் தவிக்கின்றனர். இந்தியாவின் வெளிநாட்டுப் பணப் பரிமாற்றத்தில் (remittances) வளைகுடா நாடுகள் 38% பங்களிப்பை வழங்குகின்றன. அங்கிருந்து மார்ச் மாத இறுதிக்குள் 3,75,000-க்கும் மேற்பட்ட இந்தியத் தொழிலாளர்கள் சொந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்; இதற்கு முன்பும் பல்லாயிரக்கணக்கானோர் திரும்பிய நிலையில், இது ஏற்கனவே இந்த வருகையை உள்வாங்க முடியாத கிராமப்புறப் பொருளாதாரங்கள் மீது மேலும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. உயர்ந்து வரும் எரிபொருள் மற்றும் உரங்களின் விலைகள் (யூரியா சுமார் 30% அதிகரித்துள்ளது), ஒரு முக்கியமான நடவுப் பருவத்தின் போது விவசாயிகளுக்குக் கூடுதல் அழுத்தத்தைக் கொடுக்கின்றன. எரிசக்தி இறக்குமதிகளில் ஏற்பட்ட இடையூறு மற்றும் குறைந்து வரும் வெளிநாட்டுப் பணப் பரிமாற்றம் ஆகியவற்றின் காரணமாக, அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு 94.8 ஆக வீழ்ச்சியடைந்தது. குறைந்த வளர்ச்சி, அதிகப் பணவீக்கம் மற்றும் பலவீனமான நாணயம் ஆகிய மூன்றின் கலவையை இந்தியா எதிர்கொள்கிறது என்று கோல்ட்மேன் சாக்ஸ் (Goldman Sachs) எச்சரித்துள்ளது. எண்ணெய் விலை பீப்பாய்க்கு $100 என்ற அளவில் நீடித்தால், 2027 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி 6.6% ஆகக் குறையக்கூடும், அதுவும் கூட தெளிவற்ற அரசாங்கத் தரவுகளின் அடிப்படையிலேயே கணிக்கப்பட்டுள்ளது.

### ஈரானிய இஸ்லாமியக் குடியரசு

போர் தொடங்கியபோது, ஈரானிய அரசாங்கத்திற்கு எதிரான மக்களின் கோபத்தைப் பயன்படுத்தி, தாக்குதலுக்குப் பிறகு ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வர முடியும் என்று அமெரிக்கா தவறாகக் கருதியது. ஆனால் அந்தத் தவறான கணக்கீடு ஆட்சிக்கு எதிரான மக்களின் மாபெரும் எதிர்ப்பை நிராகரித்து விடாது. ஜனவரி போராட்டத்தின் போது மக்களின் கோபம் வெடித்ததை நாம் பார்த்தோம். ஜனவரியில் போராடிய சில எதிர்ப்பாளர்கள் தூக்கிலிடப்பட்டனர். இப்போது உள் முரண்பாடுகளுடன் ஒப்பிடுகையில், ஈரானிய மக்களுக்கும் அமெரிக்க-இஸ்ரேலிய அச்சுக்கும் இடையிலான முரண்பாடு மேலான நிலையை எடுத்துள்ளது. ஈரானில் வாழ்க்கை நிலைமைகள் மோசமடைந்து வருகின்றன, பணவீக்கம் 40% ஆக உயர்ந்துள்ளது. வேலை செய்யத் தகுதியானவர்களில் கிட்டத்தட்ட 50% பேருக்கு வேலை இல்லை. இந்த நெருக்கடியில் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் முக்கியப் பங்கு வகித்தாலும், ஈரானிய ஆளும் வர்க்கத்தின் சுரண்டலும் ஒரு பெரிய காரணியாகும்.

ஈரான் நாட்டின் 1% மக்கள் 30% செல்வத்தைக் கட்டுப்படுத்துகின்றனர். இஸ்லாமிய ஆட்சியின் கருத்தியல் ஆயுதப் பிரிவான IRGC (இஸ்லாமியப் புரட்சிகரக் காவல்படை), ஒரு இராணுவ அமைப்பு மட்டுமல்ல, பொருளாதாரத்திலும் அது முக்கியப் பங்கு வகிக்கிறது. எண்ணெய் துறையின் பாதிக்கும் மேற்பட்ட பகுதிகள் அதன் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. ஈரான் அடிப்படையில் அதன் மேல்தட்டினரால் ஆளப்படுகிறது, எனவே அது அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்க்கிறது என்பதற்காகவே அதை அடிப்படையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடாக வகைப்படுத்துவது தவறாகும். அமெரிக்கப் பொருளாதாரத் தடைகளின் போது கூட ஈரானிய அரசு பிற மேற்கத்திய ஏகாதிபத்தியவாதிகளுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தது. இப்போது அது ரஷ்ய மற்றும் சீன ஏகாதிபத்தியவாதிகளுடன் நெருங்கிய உறவைக் கொண்டுள்ளது. அவர்கள் போரில் ஈரானுக்கு வெளிப்படையாக உதவி செய்கிறார்கள்.

ஈரான் நாடானது ஏகாதிபத்திய கட்டமைப்புக்குள் நின்றாலும், இது ஒரு ஒடுக்கப்பட்ட நாடாகும். எனவே, அமெரிக்க-சியோனிச ஆக்கிரமிப்புக்கு எதிராக அதன் ஆட்சியாளர்கள் நடத்தும் எதிர்ப்புப் போர் நியாயமானதாகும், மேலும் இது சர்வதேச முற்போக்கு சக்திகளால் ஆதரிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில், அதன் மக்கள்-விரோத மற்றும் சார்புத் தன்மையைப் புறக்கணிக்கக் கூடாது. ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து ஈரானின் விடுதலையை தற்போதைய தலைமையால் அடைய முடியாது, அது சில மறுசீரமைப்புகளுக்கு மட்டுமே வழிவகுக்கும். இருப்பினும், இந்த எதிர்ப்புப் போராட்டம் மேற்கு ஆசியாவிற்கு மட்டுமின்றி ஒட்டுமொத்த உலகிற்கும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தைத் தடுத்து அதன் நோக்கங்களை முறியடிப்பதில் ஈரான் அடைந்த வெற்றி, அரசியலிலும் மக்களின் போராட்டங்களிலும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தும். ஈரானிலேயே இது ஒரு புரட்சிகரமான விழிப்புணர்வுக்கு வழிவகுக்கலாம்.

**தமிழாக்கம் – தேசிகன்**

# இகக(மாலெ) விடுதலை மத்திய கமிட்டி கூட்டம்
# சென்னை, 29-31 மே 2026




**சில முக்கிய அரசியல் நிலைமைகள் குறித்து**

**1. சட்டப் பேரவைத் தேர்தல்களும் அதற்குப் பிறகும்**

ஏப்ரலில் தேர்தலைச் சந்தித்த மாநிலங்களின், தேர்தல்கள், தேர்தல் முடிவுகள், தேர்தலுக்குப் பிந்தைய மாநிலங்களின் நிலவரங்கள் குறித்து மத்தியக் கமிட்டி விவாதித்தது. மேற்குவங்கம், தமிழ்நாடு முடிவுகள் பெரிய ஆச்சரியங்களைக் கொண்டு வந்திருக்கிறது. கேரளம், அசாம் முடிவுகள் எதிர்பார்த்தபடியே இருந்தாலும் கேரளத்தில் இடது ஜனநாயக முன்னணியின் தோல்வியின் அளவும், அசாமில் காங்கிரஸ் அதன் கூட்டாளிகளின் படுதோல்வியும் நெருக்கமான படிப்பையும் ஆய்வையும் கோருகிறது. அசாமின் தொகுதி மறுவரையறை கட்டமைப்பு ரீதியாக எதிர்க்கட்சிகளின் உள்ளாற்றலுக்கு குழிபறித்துவிட்டது. கேரளத்தில் இகக(மா) புதிய சுற்று, அமைப்பு நெருக்கடியை எதிர்கொள்கிறது.

தமிழ்நாட்டில் திமுக அரசாங்கத்துக்கு எதிராக வெளிப்படையாகவே கணிசமான வெகுமக்கள் அதிருப்தி முன்வந்துள்ளது. தவெக, இளைஞர்கள் மற்றும் பெரும் பிரிவு பெண்களது பெருத்த உற்சாகத்துடன் வரவேற்கத்தக்க மாற்றமாக ஏற்றுக்கொள்ளபட்டிருக்கிறது. தவெகவின் திடீர் எழுச்சி புதிய வழக்கத்துக்கு மாறான அரசியல் நிகழ்வாகும். இப்போதைக்கு தவெகவுக்கென்று சொந்த பெரும்பான்மை இல்லை; அது காங்கிரஸ், விசிக, அய்யூஎம்எல், இகக, இகக(மா) கட்சிகளால், கடைசி இரண்டு கட்சிகளும் வெளியிலிருந்து, ஆதரிக்கப்படுகிறது. புதிய அரசாங்கத்தையும் குறிப்பாக தவெக கட்சி குறித்து, தமிழ்நாட்டிற்குள் அதன் பாத்திரம், மோடி அரசாங்கத்துடன், சங்கிப்படைகளின் பாசிச நிகழ்ச்சி நிரல், இந்த இரண்டு விஷயங்களிலும் அதன் மனப்போக்கு குறித்தும் நாம் நெருக்கமாக கவனித்து வரவேண்டும்.

மேற்குவங்க தேர்தல் முடிவுகளும் கூட திரிணாமுல் காங்கிரஸ் அரசாங்கத்தை அதன் தவறான ஆட்சியின் காரணமாக பெருமளவிலான வெகுமக்கள் நிராகரிப்பை பிரதிபலிக்கிறது; அதேசமயம், அரசாங்கம் வெளியேற்றப்பட்டதானது, தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் என்ற பெயரால் குறிவைக்கப்பட்ட வாக்காளர்களையெடுப்பாலும் பெருமளவிலான மத்திய ஆயுதக் காவல்படைகளை பயன்படுத்தியும் வாக்கு எண்ணிக்கையில் ஏராளமான முறைகேடுகளைச் செய்தும் சாத்தியமாக்கப்பட்டுள்ளது. பங்களாதேஷில் உள்ள நிலைமைகளை, பங்களாதேஷ் ஊடுருவல் பூச்சாண்டியை எழுப்பவும், கூர்மையான இஸ்லாமிய எதிர்ப்பு துருவச் சேர்க்கையை ஏற்படுத்தவும் பாஜக முழு அளவில் பயன்படுத்திக் கொண்டது.

மேற்கு வங்கத்தில் பாஜக அதிகாரத்துக்கு வந்துள்ளது விரைவாக நிகழ்ந்துள்ளது. அரசியல் கட்சி என்ற வகையில் அது அதிகாரத்தைக் கைப்பற்ற கிடைத்த ஒவ்வொரு வழியையும் பயன்படுத்தியுள்ளது. இப்போது அது இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி தனது அரசாங்கத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும் மாநிலத்தில் ஸ்திரமான சமூக, அரசியல், கருத்தியல்/கலாச்சார மேலாதிக்கத்தை பாதுகாத்துக் கொள்ளவும் முயற்சிக்கும். இந்த நிகழ்ச்சி நிரல் என்பது பெங்காலி அடையாளத்தை விரைவான மதவாத வலதுசாரி சாய்வாக மாற்றி எழுதும் நிகழ்ச்சி நிரலே தவிர வேறல்ல. மகாராஷ்ட்ராவில் சிவசேனா, தேசியவாத காங்கிரஸ் கட்சிகள் பிகாரில் ஜனதாதளத்தை செய்தது போல திரிணாமுல் காங்கிரசையும் பாஜக உடைக்க

முயலும்.

மேற்குவங்கத்தில் இருந்து உற்சாக மூட்டும் செய்தி, அங்காடிக்காரர்கள் அப்புறப்படுத்தப்படுவதற்கெதிராக கால்நடை பொருளாதாரத்தை சீர்குலைப்பதற்கெதிராக, லெனின் சிலை, மேற்கு வங்க முற்போக்கு மரபின் திருஉருக்கள் தகர்க்கப்படுவதற்கெதிராக பொதுமக்கள் எதிர்ப்பு ஏற்கனவே தொடங்கி விட்டது என்பதுதான். எதிர்க்கட்சியாக திரிணாமுல் காங்கிரஸ் தன்னை மறு கண்டுபிடிப்பு செய்ய வேண்டியிருக்கும் நிலையில் ஒன்றுபட்ட இடது அணி, பாசிச தாக்குதலுக்கு எதிராக வெகுமக்களை அமைப்பாக்குவதில் முன்கை எடுக்கும் ஆற்றலும் பொறுப்புணர்வும் கொண்டிருக்கிறது.

நமது தேர்தல் செயல்பாடு பொருத்தவரை நமது வேர்க்கால் மட்ட இருத்தலை விரிவுபடுத்துவதிலும் ஆற்றலூட்டுவதிலும் மிகக் குறைவான வெற்றியையே பிரதிபலிக்கிறது. அசாமின் பெகாலி (தா/வ) தொகுதியில் காங்கிரஸ் ஆதரவுடன் 25 ஆயிரத்துக்கும் சற்று கூடுதலான வாக்குகளையும் மேற்குவங்கத்தில் இகக(மா) ஆதரவுடன் எட்டு தொகுதிகளில் 45 ஆயிரத்துக்கும் கொஞ்சம் கூடுதலான வாக்குகளையும் பெற்றிருக்கிறோம். மற்றபடி அசாம், மேற்கு வங்கம், கேரளம், தமிழ்நாட்டில் நமது சுதந்திரமான வாக்குகள் மிகவும் குறைவாகவே உள்ளது; எஞ்சியுள்ள 20 தொகுதிகளில் மூன்றில் மட்டுமே 1000 க்கும் சற்று கூடுதலான வாக்குகளைப் பெற்றிருக்கிறோம். ஆனால், இந்த மாநிலங்களிலெல்லாம் மாறியுள்ள அரசியல் சூழலானது நமது மாபெரும் செயல்துடிப்பைக் கோருகிறது; நமது வேலை, அமைப்பு வளர்ச்சிக்கான வாய்ப்புகளையும் வழங்குகிறது. நமது குறைவான வாக்குகளினால் மனம்சோர்ந்து போவதற்கு மாறாக சவால்களை எதிர்கொண்டு சூழ்நிலையின் தேவைக்கு ஈடுகொடுத்து எழுந்தாக வேண்டும்.

**2. புதிய சூழ்நிலைக்கான பதில்வினை**

(பாஜக) மேற்கு வங்கத்தை கைப்பற்றியது, பாஜக எழுச்சியின் புதிய கட்டத்தையும் அதன் பாசிச மூர்க்கத்தின் தீவிரத்தையும் குறிக்கிறது. தென்னிந்திய மாநிலங்களைத் தவிர பஞ்சாப், இமாச்சல், ஜம்மு-காஷ்மீர் ஜார்க்கண்ட் உள்ளிட்ட சில மாநிலங்களைத் தவிர தற்போது பாஜக நாடு முழுவதையும் ஆட்சி செய்துவருகிறது. மாநிலங்களவையில் அதன் பலம் அடுத்த சில ஆண்டுகளில் மூன்றில் இரண்டு பங்காக உயரக்கூடும். அப்போது நிலுவையில் உள்ள தனது நிகழ்ச்சி நிரலான தொகுதி மறு வரையறை, ஒரே நேரத்தில் தேர்தல், இஸ்லாமியர்களையும், பிற விளிம்புநிலை பிரிவினரையும் குறிவைக்கும், குடிமக்களின் உரிமைகளை அதிதீவிரமாகக் கட்டுப்படுத்தும், மேலும் பல தீய சட்டங்களை நிச்சயமாக நிறைவேற்றும்.

ஜனநாயகத்தின் ஒட்டுமொத்த அமைப்பு வலைப்பின்னல் மீதும் அரசு அதிகாரத்தின் பல்வேறு நெம்புகோல்கள் மீதும் இறுக்கமான பிடியைக் கொண்டிருப்பதால் மோடி அரசாங்கமும், பாஜகவும் வெல்ல முடியாததுபோல் தோன்றலாம். ஆனால், பல்வேறு மக்கள் பிரிவினரது போராட்டங்களும் இந்தியா முழுவதும் மாபெரும் தீவிரத்துடன் வெடித்துக் கிளம்புகின்றன. கல்வி-தேர்வு-வேலை ஆளெடுப்புமுறைக்கு எதிராக மாணவர்-இளைஞர்களின் தொடரும் கிளர்ச்சிகள், அதிக ஊதியம் பாதுகாப்பான வாழ்வாதாரம், கண்ணியமான வேலைக்கான தொழிலாளரது கொந்தளிப்பு, நையாண்டி, கோபம், மாற்றத்துக்கான டிஜிட்டல் மேடையாக திடுமென எழுந்துள்ள கரப்பான் பூச்சி ஜனதா கட்சி இந்த மூன்றும் மேலே சொன்னவற்றை சுட்டிக்காட்டுகின்றன.

மேற்குவங்கத்தில் டிஎம்சி தோல்வியுற்றதும், தமிழ்நாட்டில் திமுக தோல்வி கண்டதும் இந்தியா கூட்டணியின் இரண்டு பெரிய உறுப்பினர்கள் கடும் பின்னடைவை சந்தித்துள்ளதைக் காட்டுகிறது. கேரளத்தில் இடது ஜனநாயக முன்னணியின் தோல்வி, இந்தியாவின் எந்தவொரு மாநிலத்திலும் இடதுசாரிகள் ஆளவில்லை எனும் நிலமையை ஏற்படுத்தியுள்ளது. இடதுகள் ஆளும் மாநிலம் எதுவுமில்லை என்பதே இடதுசாரி முகாமின் அடிப்படையான பலவீனம் எதையும் கட்டிக் காட்டவில்லை. கேரளத்தின் தோல்வியைச் சுட்டிக்காட்டி இடதுசாரிகள் பொருத்தமற்று போய்விட்டனர் என்பது போன்ற உணர்வை ஏற்படுத்திட வலதுசாரி பரப்புரை விரும்புகிறது. மோடி அரசாங்கம் வெல்ல முடியாதது போன்ற உணர்தலும், எதிர்க்கட்சி ஒற்றுமையின் சரிவும், சிதைவும், இடதுசாரி அரசியல் பொருத்தமற்றுப் போய்விட்டது அல்லது காலாவதியாகிவிட்டது போன்ற அவநம்பிக்கைவாத உளவியல் சூழலை உருவாக்குகிறது.

நாம் இந்த அவநம்பிக்கை உணர்தலை விட்டொழிக்க வேண்டும். மேலும், நமது வெகுமக்கள் முன்முயற்சியை விரிவுபடுத்தவும், கட்சி அமைப்பை வலுப்படுத்தவும் முழுக்கவனம் செலுத்திட வேண்டும். தற்போது, மேற்கு வங்கத்தில் இகக (மா) வுடனும், இடது முன்னணியுடனும் தமிழ்நாட்டிலும் செயலுக்கான ஒற்றுமைக்கு பெரும் வாய்ப்புகள் உள்ளன. இதற்கான வாய்ப்புகளைக் கண்டறிய வேண்டும்; அதேசமயம், நமது செயல்தந்திர வழியின் எல்லைக் கோடுகள் மங்கிவிடாமல் இருக்கவும் அல்லது நமது அரசியல் சுதந்திரத்தை வலுவிழக்கச் செய்துவிடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

# சில முக்கிய அரசியல் தீர்மானங்கள்

**1. கட்டாய நிலக் கையகப்படுத்துதல்களும், கார்ப்பரேட் நில அபகரிப்புகளும்**

மோடி அரசின் கீழ் நாடு முழுவதும் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் கட்டாய நிலக் கையகப்படுத்துதல்களை, கார்ப்பரேட் நில அபகரிப்புகளை மத்திய கமிட்டி வன்மையாகக் கண்டிக்கிறது. கடந்த பல பத்தாண்டுகளில் சக்திவாய்ந்த மக்கள் போராட்டங்கள் மூலம் வென்றெடுக்கப்பட்ட, நிலக் கையகப்படுத்தல் சமூகத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பீடு செய்வது (Social Impact Assessment), கிராம சபையின் ஒப்புதல், மறுவாழ்வு, மறுகுடியேற்றம், நியாயமான இழப்பீடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு இன்ன பிற அனைத்து சட்டப்பூர்வப் பாதுகாப்புகளையும் மோடி ஆட்சி சீர்குலைத்து வருகிறது. விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், ஆதிவாசிகள், தலித்துகள் மற்றும் கிராமப்புற சமூகங்களின் வாழ்வாதாரத்தின் மீது கடும் தாக்குதலை நடத்தி வருகிறது.

பீகாரில், ரியல் எஸ்டேட் துறையால் உந்தப்படும் வளர்ச்சி என்ற பெயரால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களை, துணை நகரங்கள், நெடுஞ்சாலைகள் போன்ற திட்டங்களுக்காக கையகப்படுத்திட முன்மொழியப்பட்டுள்ளது. மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றிட வேண்டுமானால், அனைவரும் ஒன்றிணைந்து இந்தத் திட்டங்களை எதிர்த்திட வேண்டும்.

ஒடிசாவின் சிஜிமாலி பிராந்தியத்திலுள்ள பழங்குடி சமூகம், வேதாந்தா லிமிடெட் நிறுவனத்தால் தொடங்கப்படவுள்ள பாக்சைட் சுரங்கத் திட்டத்தை எதிர்த்துப் போராடி வருகிறது. நிலம், காடுகள், இயற்கை வளங்களை கார்ப்பரேட்டுகள் அபகரிக்க உதவும் வகையில் மக்களின் ஜனநாயக ரீதியிலான எதிர்ப்பை ஒடுக்க அரசு தனது அதிகாரப் பலத்தைப் பயன்படுத்தி வருகிறது. காவல்துறையின் வன்முறை, கைதுகள், அச்சுறுத்தல்கள், ட்ரோன் மூலம் கண்காணிப்பு, பொய்யாக தயாரிக்கப்பட்ட ஒப்புதல்கள், வன உரிமைச் சட்டம், பட்டியலிடப்பட்ட பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்ட பஞ்சாயத்து சட்டம், இதர அரசியலமைப்புப் பாதுகாப்புகளின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட உரிமைகளை மீறுதல் போன்றவை குறித்து வரும் அறிக்கைகள் பழங்குடி சமூகங்களின் உரிமைகள் மீதான கடுமையான தாக்குதலைக் குறிப்பதாக உள்ளன

**2. முக்கியத் தேர்வுகளில் முறைகேடுகள், ஊழல், வினாத்தாள் கசிவுகள்**

நீட், சிபிஎஸ்இ 12ஆம் வகுப்பு முடிவுகள், மத்திய அரசின் பணியாளர் தேர்வு ஆணையம் நடத்தும் பொதுப் பணி தேர்வு, மத்திய பல்கலைக் கழகங்களுக்கான நுழைவுத் தேர்வு உள்ளிட்ட முக்கியத் தேர்வுகளில் மீண்டும் மீண்டும் நடந்து வரும் முறைகேடுகள் ஊழல்கள், வினாத்தாள் கசிவுகள் குறித்து மத்தியக் கமிட்டி ஆழமான கவலையை வெளிப்படுத்தியது. இந்தச் சம்பவங்கள் கோடிக்கணக்கான மாணவர்களின் கனவுகளைச் சிதைத்துள்ளதுடன், நியாயமான வெளிப்படையான நம்பகமான தேர்வு முறையை உறுதி செய்யத் தவறிய அரசாங்கத்தின் தோல்வியையும் அம்பலப்படுத்தியுள்ளது. கல்வி பெருமளவில் தனியார்மயமாக்கப்பட்டும், கண்ணியமான வேலைக்கான வாய்ப்புகள் குறைந்தும் வரும் வேளையில், தொடர்ச்சியான வினாத்தாள் கசிவுகள், தேர்வு முடிவு சர்ச்சைகள், நிர்வாகக் குறைபாடுகள் ஆகியவை இளைஞர்களிடையே ஆழ்ந்த விரக்தியை ஏற்படுத்தியுள்ளன. தர்மேந்திர பிரதானை கல்வி அமைச்சகப் பொறுப்பில் இருந்து நீக்க வேண்டும் என்றும், என்டிஏ (தேசிய தேர்வு முகமை) அமைப்பைக் கலைக்க வேண்டும் என்றும், வினாத்தாள் கசிவு சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தி அதற்குப் பொறுப்பானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்த அவை கோருகிறது. இந்திய இளைஞர்களின் எதிர்காலத்தை இனிமேலும் அலட்சியமாக எடுத்துக்கொள்ள முடியாது.

**3. எஸ்ஐஆர் & அரசியலமைப்பு ரீதியான வாக்குரிமை அரிக்கப்படுவது**

தேர்தல் ஆணையத்தின் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) நடைமுறை குறித்து சிபிஐ(எம்எல்) இன் ஆழ்ந்த கவலையை மத்திய கமிட்டி மீண்டும் வலியுறுத்துகிறது. இந்த நடைமுறையானது வாக்காளர் பட்டியலிலிருந்து பெருமளவிலான உண்மையான வாக்காளர்களை நீக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது: குறிப்பாக ஏழைகள், விளிம்புநிலை மக்கள், புலம்பெயர் தொழிலாளர்கள், தலித்துகள், பெருமளவிலான முஸ்லிம்கள் ஆகியோரை இலக்காகக் கொண்டுள்ளது. ஆளும் ஆட்சிக்கு எதிராக மக்களிடையே வளர்ந்து வரும் அதிருப்திக்கு மத்தியில் தனது தேர்தல் வெற்றியை உறுதி செய்வதற்காக தேர்தல் ஆணையம் போன்ற ஜனநாயக நிறுவனங்களையும், தேர்தல் நடைமுறைகளையும் கையாளுவதையே பாஜக பெருமளவில் நம்பியிருக்கிறது. தேர்தல் வெற்றிக்காக 'எஸ்ஐஆர்' மூலம் வாக்காளர் பட்டியல்களில் திட்டமிட்ட வகையில் முறைகேடு செய்யும் இந்த முறையானது முதலில் பீகாரிலும், இப்போது மூர்க்கத்தனமாக மேற்கு வங்கத்திலும்

கடைபிடிக்கப்பட்டிருக்கிறது. மேற்கு வங்கத்தில் லட்சக்கணக்கான வாக்காளர்களை நீக்குவதற்காக ‘தர்க்கரீதியான முரண்பாடு’ என்ற ஒரு புதிய வகைப்பாடு கண்டுபிடிக்கப்பட்ட விதம், சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் உண்மையிலேயே முன்னுதாரணமற்ற ஒன்றாகும். உச்ச நீதிமன்றம் சமீபத்தில் இந்த ‘எஸ்ஐஆர்’ நடைமுறையை உறுதி செய்திருப்பது, கோடிக்கணக்கான இந்தியர்களின் அரசியலமைப்பு ரீதியான வாக்குரிமை அரிக்கப்படுவது குறித்த கவலைகளை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

**4. ஈரானுக்கு எதிரான அமெரிக்க - இஸ்ரேலின் ராணுவ ஆக்கிரமிப்பு**

ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் தொடர்ந்து நடத்தி வரும் ராணுவ ஆக்கிரமிப்பை மத்திய கமிட்டி வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த ஏகாதிபத்தியத் தாக்குதலுக்கு எதிராக தீரத்துடன் போராடி வரும் ஈரானுக்கும் அதன் மக்களுக்கும் முழுமையான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது. இந்தப் போரின் விளைவாக ஹார்முஸ் நீரிணையில் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டிருப்பது, பிராந்திய அமைதிக்கு அச்சுறுத்தலாக இருப்பது மட்டுமின்றி, உலகளாவிய கச்சா எண்ணெய் மற்றும் எரிசக்தி நெருக்கடியைத் தூண்டியுள்ளது: இது இந்தியாவைப் போன்ற நாடுகளைக் கடுமையாகப் பாதித்துள்ளது. அமெரிக்க-இஸ்ரேலின் ராணுவ ஆக்கிரமிப்பிற்கான விலையை இந்திய மக்களும் அதன் உழைக்கும் வர்க்கமுமே கொடுத்து வருகின்றனர். பாலஸ்தீனத்திற்கான இந்தியாவின் நீண்டகால ஆதரவு, ஈரானுடனான நமது வரலாற்று ரீதியான உறவு ஆகியவற்றுக்கு துரோகமிழைத்து அமெரிக்க-இஸ்ரேலின் போர்த்தந்திர நலன்களுடன் மீண்டும் மீண்டும் தன்னை இணைத்துக் கொள்ளும் மோடி அரசாங்கத்தின் அடிபணிந்து போகும் வெளியுறவுக் கொள்கை குறித்து இந்த அவை ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறது. ஈரான் மீதான அமெரிக்க இஸ்ரேலின் ராணுவ ஆக்கிரமிப்பு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும், ஈரானின் இறையாளுமை மதிக்கப்பட வேண்டும் என்றும் சர்வதேச நீதி, நாடுகளின் இறையாளுமைக்கான மரியாதை, இந்திய மக்களின் நலன்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்திய அரசாங்கம் தனது வெளியுறவுக் கொள்கையை வகுக்க வேண்டும் என்றும் இந்த அவை கோருகிறது.

**5. இந்தியாவில் ஆழமடைந்து வரும் பொருளாதார நெருக்கடி**

ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி, அதிகரித்து வரும் பணவீக்கம், அதிகரித்து வரும் அந்நியச் செலாவணி கையிருப்பு மீதான அழுத்தம், பெருகி வரும் வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றுடன் இந்திய மக்கள் சிக்கன நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு பிரதமர் மோடி சமீபத்தில் விடுத்துள்ள அழைப்பு ஆகியவற்றால் குறிக்கப்படும் ஆழமடைந்து வரும் பொருளாதார நெருக்கடி குறித்து மத்தியக் கமிட்டி கடுமையான கவலையை வெளிப்படுத்துகிறது. ஈரானுக்கு எதிரான போரின் காரணமாக எண்ணெய் எரிவாயு விநியோகம் குறைந்ததைத் தொடர்ந்து விடுக்கப்பட்டுள்ள இந்த அழைப்பானது, கார்ப்பரேட் சார்பு, மக்கள் விரோதப் பொருளாதாரக் கொள்கைகள், பொறுப்பற்ற தனியார்மயமாக்கல், குறைந்து வரும் பொது முதலீடு ஆகியவற்றால் இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்கனவே ஏற்பட்டுள்ள கட்டமைப்பு பலவீனங்களை மறைப்பதற்காகவே செய்யப்பட்டுள்ளது. இப்போது இந்த நெருக்கடியின் சுமையானது விலைவாசி உயர்வு, பொதுச் செலவினக் குறைப்பு ஆகியவற்றின் மூலம் சாமானிய குடிமக்கள் மீது சுமத்தப்படுகிறது. கார்ப்பரேட்டுகளால் இயக்கப்படும் இந்தக் கொள்கைகளை முழுமையாக மாற்றியமைக்கவும், வலுவான பொது முதலீட்டை மேற்கொள்ளவும், வாழ்வாதாரங்களைப் பாதுகாக்கவும், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும், தொழிலாளர்கள், விவசாயிகள், இந்திய பொதுமக்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கு முன்னுரிமை அளிக்கும் ஒரு பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்றும் சிபிஐ(எம்எல்) கோருகிறது.

**6. தொழிலாளர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க எழுச்சி**

மனேசர், குருகிராம், நொய்டா மற்றும் பிற தொழில்துறை மையங்களில் உள்ள தொழிலாளர்கள், ஒட்டுமொத்தமாக தொழிலாளர் வர்க்க உரிமைகள் அழிக்கப்படுவதற்கும், கடுமையான சுரண்டல்களுக்கும் எதிராக மேற்கொண்டு வரும் வரலாற்றுச் சிறப்புமிக்க எழுச்சிக்கு மத்தியக் கமிட்டி தனது தளராத ஆதரவை வெளிப்படுத்துகிறது. குறைந்த ஊதியம், பாதுகாப்பற்ற வேலைச் சூழல், தொழிலாளர் உரிமைகள் மறுப்பு, அதிகரித்து வரும் அரசின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக இந்தத் தொழிலாளர்கள் போராடி வருகின்றனர்

தற்போது நடைபெற்று வரும் இந்த இயக்கம், ஆழமடைந்து வரும் வாழ்க்கைச் செலவு நெருக்கடியையும் தொழிலாளர்களின் வருவாய்க்கும் கண்ணியமான வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுக்கும் இடையே உள்ள விரிவடைந்து வரும் இடைவெளியையும் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. நீண்ட வேலை நேரம், கடுமையான விரிவடைந்து வரும் பணி சூழ்நிலைகள் இருந்தபோதிலும், லட்சக்கணக்கான தொழிலாளர்கள் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூட போதுமானதாக இல்லாத மிகக் குறைந்த ஊதியத்திலேயே தொடர்ந்து உயிர் பிழைத்து வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபடும் தொழிலாளர்கள், சமூக ஆர்வலர்களுக்கு எதிராக ஏவப்பட்ட கைதுகள், அச்சுறுத்தல்கள், தடியடிகள், பொய்யான குற்றவியல் வழக்குகள், இதர ஒடுக்குமுறைகளை இந்த அவை வன்மையாகக் கண்டிக்கிறது. மனேசரில் 17 தொழிலாளர்கள் மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது குறித்து கமிட்டி ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியது. ஏஐசிசிடியுவுடன் இதர தொழிற்சங்கங்களின் தலையீடு, சட்டப்பூர்வ முயற்சிகளைத் தொடர்ந்து நான்கு தொழிலாளர்களுக்கு ஜாமீன் வழங்கப்பட்டுள்ள நிலையில், மீதமுள்ள தொழிலாளர்கள் இன்னும் சிறையிலேயே உள்ளனர். இந்தப் போராட்டங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான தொழிலாளர்களும், சமூக ஆர்வலர்களும் பல மாநிலங்களில் இன்னும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைத்துத் தொழிலாளர்களையும், சமூக ஆர்வலர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும், அவர்கள் மீது போடப்பட்ட அனைத்து புனையப்பட்ட வழக்குகளையும் திரும்பப் பெற வேண்டும் என்றும், தொழிலாளர்களின் ஜனநாயகப் போராட்டங்களை ஒடுக்குவது அச்சுறுத்துவது, குற்றமயமாக்குவதை காவல்துறை நிறுத்த வேண்டும் என்றும் நாங்கள் கோருகிறோம்.

மேலும், அனைத்து தொழிலாளர்களுக்கும் மாதத்திற்கு ரூ. 42,000-க்கு குறையாத சட்டப்பூர்வ குறைந்தபட்ச ஊதியமானது வழக்கமான ஊதிய உயர்வுகளுடன் வழங்கப்பட வேண்டும் என்றும், தொழிற்சங்க உரிமைகள் தொழிலாளர்களின் வேலைநிறுத்த உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் நாங்கள் கோருகிறோம். வாராந்திர விடுமுறையுடன் கூடிய 8 மணி நேர வேலை கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

ஊதிய உயர்வு அளிக்க வேண்டும், ஒடுக்குமுறைகளை நிறுத்த வேண்டும் எனக் கோருமாறும், தொழிலாளர் இயக்கத்துக்கு செயலூக்கமான ஆதரவை அளிக்குமாறும், அனைத்து ஜனநாயக அமைப்புகள், தொழிற்சங்கங்கள், அறிவுஜீவிகள், மாணவர்கள், குடிமக்களுக்கு மத்திய கமிட்டி அழைப்பு விடுக்கிறது.

**7. மதச் சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடுகள் நிறுவனமயமாக்கப்படுவது**

விலக்கி வைக்கும் சட்டங்கள், குறி வைக்கப்பட்ட அரசு நடவடிக்கைகள், வெறுப்புப் பிரச்சாரங்கள், பொருளாதாரப் புறக்கணிப்புகள், கட்டிடங்களை இடிக்கும் போக்குகள், சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்ளும் வன்முறைகள், பாரபட்சமான நிர்வாக நடைமுறைகள் ஆகியவற்றின் மூலம் மதச் சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடுகள் நிறுவனமயமாக்கப்பட்டு வருவது குறித்து மத்திய கமிட்டி தனது கடும் கவலையை வெளிப்படுத்துகிறது. இது மக்கள் தொகையின் ஒரு பகுதியினரை இரண்டாம் தரக் குடிமக்களாகக் குறைக்கும் ஒரு நிறவெறி ஒழுங்கை உருவாக்குகிறது. மதச்சார்பின்மை, சமத்துவம், சமக்குடியுரிமை ஆகிய அரசியலமைப்புக் கோட்பாடுகளைச் சீர்குலைக்கும், ஜனநாயக உரிமைகளுக்கு, சமூக இணக்கத்திற்கு அச்சுறுத்தல் விளைவிப்பதோடு, சர்வாதிகார ஆட்சியை வலுப்படுத்தும் இத்தகைய பெரும்பான்மைவாதக் கொள்கைகள் தீவிரமாக எதிர்க்கப்பட வேண்டும்.

**8. அரசு நிறுவனங்களின் சுதந்திரமும் நடுநிலைமையும் அரித்துப்போவது**

இந்திய அரசின் கேந்திர முக்கியத்துவம் பெற்ற நிறுவனங்களான நீதித்துறை, அதிகார வர்க்கம், காவல்துறை. பாதுகாப்புப் படைகள், அமலாக்கத்துறை, மத்தியப் புலனாய்வுத்துறை போன்ற மத்திய முகமைகளின் சுதந்திரமும் நடுநிலைமையும் நாளுக்கு நாள் சீர்குலைந்து வருவது குறித்து மத்திய கமிட்டி தனது கடுமையான கவலையை வெளிப்படுத்துகிறது. சங்கப் பரிவாரம் மற்றும் பெருமுதலாளிகளின் மதவாத-கார்ப்பரேட் நிகழ்ச்சி நிரல் வரிசையில் இந்த நிறுவனங்கள் அதிகரித்த அளவில் தங்களை இணைத்துக் கொள்வதானது அரசியலமைப்பு வழியிலான ஆட்சி முறை, ஜனநாயக உரிமைகள், சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை முற்றிலும் பலவீனப்படுத்துகிறது.

**9. நடந்து கொண்டிருக்கும் புல்டோசர் ஆட்சிக்கு எதிராக வெகுமக்கள் எதிர்ப்பைக் கட்டுவோம்**

மோடி அரசாங்கத்தால் நடத்தப்பட்டு வரும் ‘புல்டோசர் ஆட்சி’ மாதிரிக்கு எதிராக ஜனரஞ்சகமான போராட்டங்களை முன்னெடுக்குமாறு பரந்த மக்களுக்கு மத்தியக் கமிட்டி அழைப்பு விடுக்கிறது. இந்தியா முழுவதும் வீடுகளை இடிப்பதற்கும் வலுக்கட்டாயமாக வெளியேற்றப் படுவதற்கும் புல்டோசர்களைப் பயன்படுத்துவது அதிகரித்து வருவதானது ஏழைகள், உழைக்கும் மக்களின் வாழ்வாதாரம், வீட்டுக்கான உரிமை, கண்ணியத்திற்கு ஒரு கடுமையான அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

மேற்கு வங்கத்தில் பல பத்தாண்டுகளாகப் பயணிகளுக்கு அத்தியாவசியச் சேவைகளை வழங்கி வந்த தெருவோர வியாபாரிகளை இலக்காகக் கொண்டு சமீப காலத்தில் நடத்தப்படும் பெருமளவிலான வெளியேற்ற நடவடிக்கைகள், நாடு முழுவதும் காணப்படும் பரந்த போக்கின் ஒரு பகுதியாகும். அஸ்ஸாம் தேர்தலில் இஸ்லாமிய அச்சத்துடன் கூடிய புல்டோசர் இடிப்புகளைப் பயன்படுத்தியே பாஜக களம் கண்டது. பீகாரிலும் கூட தர்பங்கா,

பாட்னா, சமஸ்திபூர் மற்றும் இதர இடங்களில் புல்டோசர் இடிப்புகளால் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். டெல்லியில் எவ்வித மறுவாழ்வு ஏற்பாடுகளும் இன்றி குடிசைவாசிகளை வெளியேற்றுவது ஒரு வழக்கமான நிகழ்வாக மாறியுள்ளது. இதுபோன்ற வெளியேற்ற நடவடிக்கைகள் அனைத்தும் முன்கூட்டியே அறிவிப்பு வழங்குதல், வெளியேற்றத்திற்கு முன் மறுவாழ்வு அளித்தல் போன்ற நிலை நிறுத்தப்பட்ட சட்டப்பூர்வப் பாதுகாப்புகளை முற்றிலும் மீறியே எப்போதும் மேற்கொள்ளப்படுகின்றன.

புல்டோசர் ஆட்சி என்பது வீடுகள் மீதான வாழ்வாதாரங்கள் மீதான தாக்குதல் மட்டுமல்ல, அது சட்டத்தின் ஆட்சியை அரித்துப் போகச் செய்வதுமாகும். பல சந்தர்ப்பங்களில், புல்டோசரால் பாதிக்கப்படும் குடிசைவாசிகளிடையே பிரிவினையை உண்டு பண்ண இடிப்புகளுடன் மதவாதக் கதையாடல்களும் இணைந்து கொள்கின்றன.

மேற்கு வங்கம் முதல் பீகார், டெல்லி மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் புல்டோசர் ஆட்சிக்கு எதிராக நடந்து வரும் தீரமிக்க மக்கள் எதிர்ப்புகளையும் இந்த அவை பதிவு செய்கிறது. கட்டாய இடிப்புகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், வெளியேற்றத்திற்கு முன் மறுவாழ்வு வழங்கப்பட வேண்டும் என்றும், வாழ்வாதாரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், அரசியலமைப்பு மற்றும் சட்டப்பூர்வ பாதுகாப்புகள் கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும் என்றும் நாங்கள் கோருகிறோம்.

### 10. பாஜகவின் பழிவாங்கும் அரசியலும் எதிர்க்கட்சிகளுக்கு எதிராக அரசு நிறுவனங்களைத் தவறாக பயன்படுத்துவதும்

எதிர்க்கட்சித் தலைவர்கள், கட்சிகளுக்கு எதிராக பாஜக தொடர்ந்து நடத்தி வரும் பழிவாங்கும் அரசியலை, அரசு நிறுவனங்களைத் தவறாகப் பயன்படுத்துவதை மத்தியக் கமிட்டி வன்மையாகக் கண்டிக்கிறது. கேரள மேனாள் முதல்வர் பினராயி விஜயனின் இல்லத்தில் சமீபத்தில் நடத்தப்பட்ட அமலாக்கத்துறை சோதனையும், அதைத் தொடர்ந்து மேற்கு வங்கத்தில் தேர்தலுக்குப் பிந்தைய வன்முறையால் பாதிக்கப்பட்ட ஒருவரின் குடும்பத்தினரைச் சந்திக்கச் சென்ற திரிணாமுல் காங்கிரஸ் எம்பி அபிஷேக் பானர்ஜி மீது நடத்தப்பட்ட தாக்குதலும், அரசியல் எதிரிகளை வாய் திறக்காமல் செய்வதை நோக்கமாகக் கொண்ட அச்சுறுத்தலின் ஆபத்தான போக்கைப் பிரதிபலிக்கின்றன. மக்களின் அவசரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக, ஆளும் அரசு விசாரணை முகமைகளை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி, ஜனநாயகரீதியிலான எதிர்ப்பைப் பலவீனப்படுத்த அரசியல் பகைமைச் சூழலை ஊக்குவிக்கிறது. அரசு நிறுவனங்களை ஒருதலைப்பட்சமாகப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்றும், தன்னாட்சி பெற்ற நியமன முறைகள், நிர்வாக செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும் என்றும் சிபிஐ(எம்எல்) கோருகிறது. இதன் மூலம், அதிகாரத்திற்கு நெருக்கமானவர்களும், ஊழலில் ஈடுபட்டவர்களும், குற்றங்களில் ஈடுபட்டவர்களும் தண்டனையிலிருந்து தப்ப முடியாது.

### 11. எஃப்சிஐ சிலோ ஒப்பந்தங்களை அதானி கைப்பற்றுவதும், உணவு பாதுகாப்பின் மீதான தாக்குதலும்

அதானி அக்ரி லாஜிஸ்டிக்ஸ் லிமிடெட், லீப் இந்தியா ஃபுட் & லாஜிஸ்டிக்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கு இந்திய உணவுக் கழகத்தின் (எஃப்சிஐ) தானியக் கிடங்கு (சிலோ) ஒப்பந்தங்களை வழங்குவதற்காக, ‘ஏகபோக எதிர்ப்பு’ விதி நீக்கப்பட்டதை மத்தியக் கமிட்டி வன்மையாகக் கண்டிக்கிறது. இந்தப் போர்த்தந்திர முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தில் எந்தவொரு தனி நிறுவனமும் ஆதிக்கம் செலுத்துவதைத் தடுப்பதற்காக, இந்திய உணவுக் கழகம் முதலில் ஓர் ஏகபோக எதிர்ப்பு விதியை முன்மொழிந்திருந்தது. இருப்பினும், நிதி ஆயோக்கும், பொருளாதார விவகாரங்களுக்கான துறையும் 2022 இல் இந்த விதியை நீக்குமாறு கட்டாயப்படுத்தியதாகத் தெரிகிறது. அதனைத் தொடர்ந்து நடந்த ஏலத்தின் விளைவாக இந்த இரு நிறுவனங்களும் இத்திட்டத்தின் மொத்த மதிப்பான ₹20,000 கோடியில் சுமார் ₹16,500 கோடி மதிப்பிலான ஒப்பந்தங்களைக் கைப்பற்றியுள்ளன. இத்திட்டத்தின் மொத்த சேமிப்புத் திறனான 60 லட்சம் மெட்ரிக் டன்னில் 46.5 லட்சம் மெட்ரிக் டன்னை இந்த இரு நிறுவனங்களே தற்போது கட்டுப்படுத்துகின்றன. இது மொத்த திட்டமிடப்பட்ட திறனில் 77.5% ஆகும்.

விவசாயிகளுக்கு லாபகரமான விலையை ஆதரிப்பதற்கும், நாட்டின் உணவுப் பாதுகாப்பு, விலை நிலைத்தன்மையைப் பாதுகாப்பதற்கும், உணவு தானியங்களைக் கொள்முதல் செய்தல், சேமித்தல், கொண்டு செல்லுதல், விநியோகித்தல் ஆகியவற்றுக்காக 1964 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட உணவுக் கழகச் சட்டத்தின் கீழ் ஜனவரி 1, 1965 இல் இந்திய உணவுக் கழகம் (எஃப்சிஐ) நிறுவப்பட்டது. இந்திய உணவுக் கழகத்தின் தானியச் சேமிப்பு உள்கட்டமைப்பை இவ்வாறு பின்வாசல் வழியாகத் தனியார்மயமாக்குவதும், ஏகபோகமாக்குவதும் இந்தியாவின் உணவுப் பாதுகாப்பு, இறையாளுமையின் மீதான நேரடித் தாக்குதலாகும். மேலும் இது 1964 ஆம் ஆண்டின் உணவுக் கழகச் சட்டத்தின் மூலம் எட்டப்பட்ட நோக்கங்களையும் ஆதாயங்களையும் சீர்குலைக்க அச்சுறுத்துகிறது.

# பஞ்சமி நில ஆக்கிரமிப்பு: அதிர்ச்சியூட்டும் கதைகள்!



"பிஆர்பி குவாரி நிறுவன ஆக்கிரமிப்பில் உள்ள பஞ்சமி நிலம்"

மேலூர் பஞ்சமி நிலம் பற்றி ஒரு பருந்துப் பார்வையில் சென்ற இதழில் சொல்லியிருந்தோம். சற்று இறங்கிச் சென்று பார்த்தபோது கிடைத்த செய்திகளை வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

மதுரை மாவட்டத்தில் 2843 ஏக்கர் நிலம் தலித்துகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக 11-05-2015 நாளிட்ட ஹிண்டு(ஆங்கிலம்) சொல்கிறது. மேலூர் வட்டத்தில் மட்டும் 2548 ஏக்கர் உள்ளதாக தோழர் மெய்யர் கேட்டிருந்த தகவலறியும் உரிமைச்சட்ட கேள்விக்கு மேலூர் தனி வட்டாட்சியர் பதிலளித்துள்ளார். இந்த நிலங்கள் ஒரே சமயத்தில் வழங்கப்பட்டதா? பல கட்டங்களாக வழங்கப்பட்டாதா என்ற விவரங்களைத் தேட வேண்டியுள்ளது. மேலூர் வட்டத்தின் 48 கிராமங்களில் இந்த 2548 ஏக்கர் நிலங்கள் உள்ளன. இதில், 9 கிராமங்களில் (பெரும்பாலும் ஊராட்சிகள்) மட்டும் 1815 ஏக்கர் நிலங்கள் உள்ளன. மீதமுள்ள733 ஏக்கர் நிலங்கள் 39 கிராமங்களில் உள்ளன. இந்த ஏற்றத்தாழ்வு, பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் நிலம் வழங்கும் போதே இருந்ததா? அல்லது பிற்காலத்தில் ஏற்பட்டதா என கண்டறிய வேண்டும்.

பஞ்சமி நிலம் ஆக்கிரமிப்பில் உள்ள கிராமங்களை சுற்றிப்பார்த்ததில், பெரும்பகுதி வறண்ட புஞ்சை நிலங்கள். பெரும்பகுதி தரிசாகவே உள்ளன. கீழவளவு கிராமத்தின் பஞ்சமி நிலத்தை சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு வசதி படைத்தவர் பம்ப் செட் அமைத்து பயிரிட்டு வருகிறார். ஆனால் 3 தலைமுறைக்கு மேல் ஒரே இடத்தில் வசித்து வரும் டாக்டர் அம்பேத்கர் நகர் தலித்துகள், ஒரு வீட்டில் மூன்று, நான்கு குடும்பங்களாக வசித்து வருகின்றனர். கழிப்பிடம், நடைபாதை, வடிகால், சாலை வசதி எதுவும் இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர். சுழற்சிமுறையில் சமையல் செய்பவர்களும் உண்டு. பத்துக்கு பத்து இடமே உள்ள ஒரு வீட்டில் 12 பேர் வரை படுத்து தூங்க வேண்டிய அவலத்தின் உச்சம். கடந்த 15 ஆண்டுகளாக திங்கள் தோறும் மனுநீதி நாளில் கீழவளவு மக்கள் வீட்டுமனை கேட்டு மனு கொடுத்து வருகின்றனர். அரசின் கைகளில் உள்ள 7.11 ஏக்கர் நிலத்தில் இவர்களுக்கு வீட்டுமனை வழங்கவில்லை. மனு நீதியே தொடர்கிறது. இங்கு தனியார் ஆக்கிரமிப்பில் 28 ஏக்கர் உள்ளது.

தலித்துகளுக்கு அரசு வழங்கிய நிலம், திரும்பவும் அரசுக்கே சென்றது எப்படி?

வழங்கப்பட்ட 2548 ஏக்கரில் 687 ஏக்கர் அரசு வசம் உள்ளதாக ஆவணங்கள் சொல்கின்றன. எப்படிச் சென்றது? விவசாயிகளுக்கும் தெரியவில்லை. தலித் விவசாயகள் விவசாயக் கடன் கேட்டு விவசாய கூட்டுறவு வங்கிகளுக்கு செல்லும் போதுதான் நிலம் அவர்கள் கைகளிலிருந்து அரசின் கைகளுக்கு வந்து விட்டதை தெரிந்து கொண்டனர்! இது எப்படி சாத்தியம்? அரசியல் செல்வாக்குள்ள பெரும் பணக்காரர்கள், இவர்களுக்கு வளைந்து கொடுக்கும் ஊழல் அதிகார வர்க்கம், இவர்களைக் காப்பாற்ற ஆட்சி நிர்வாகம் இருக்கும் வரை எதுவும் சாத்தியமே! தலித்துகள் பெயரைச் சொல்லியே வேறு எவரோ நிலத்தை அடமானம் வைத்து கடன் வாங்கி ஏப்பம் விட்டு விட்டனர். உண்மையான உடமையாளரை அடையாளம் காணாமல் எப்படி கடன் கொடுத்தார்கள்?

திருவாதாவூர் தலித் விவசாயி பி முருகனின் தாத்தா பயிரிட்டு வந்த 3 ஏக்கர் பஞ்சமி நிலம் 20 ஆண்டுகளுக்கு முன்பு சாதி இந்து ஒருவரால் அபகரிக்கப்பட்டு விட்டதாகச் சொல்கிறார். பொய்யான ஆவணங்கள் மூலம் வங்கியில் கடன் வாங்கி பின்னர் அதையே உண்மை ஆவணமாக ஆக்கிக் கொண்டிருப்பார். தலித்துகளுக்கு உரிமையாக்கிட முன்வராத நிர்வாகம் அபகரிப்போருக்கு உரிமையாக்கிட முன் வருகிறது. அபகரிப்போர் எண்ணிக்கையிலும் செல்வாக்கிலும் அதிகம் உள்ளனர். அவர்களே

அதிகார வர்க்க கட்டமைப்பிலும் அதிகம் உள்ளனர். இவர்களே அரசாங்க அதிகாரத்திலும் அதிகம் உள்ளனர். அதனால்தான் இந்த நிலைமை.

பஞ்சமி நிலத்தை வேறுசாதியினருக்கு விற்க கூடாது. வேற்று சாதியினர் வாங்கக் கூடாது. அப்படி விற்றாலோ, வாங்கினாலோ அது செல்லாது. அந்த நிலத்தை வருவாய்த்துறை கையகப்படுத்தி உரிய தலித்திடமே ஒப்படைப்பதைத் தவிர வேறுவழி இல்லை என சந்துரு, பிரபா சிறீதேவன் உள்ளிட்ட பல நீதிபதிகளின் தீர்ப்புகள் உள்ளன. உச்சநீதிமன்றமும் இவற்றை உறுதிப்படுத்தி உள்ளது. ஆயினும், இதுவரை, ஒரு செண்ட் ஆக்கிரமிப்பு நிலமாவது, தலித்திடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளதா? புதிய அரசுதான் ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

கொங்கம்பட்டி, செம்மினிப்பட்டி கிராமத்தில் 282 ஏக்கர் பஞ்சமி நிலம் உள்ளது. இந்த கிராமத்தின் பஞ்சவர்ணம், “நாங்கள் மூன்று தலைமுறைக்கு மேல் இங்கு வசித்து வருகிறோம். ஆனால் எங்களுக்கு எந்த பட்டாவும் (உரிமைச் சான்று) கொடுக்கப்படவில்லை” என்றார். பலமுறை மனுக்கொடுத்தும் போராட்டங்கள் நடத்தியும் எதுவும் நடக்கவில்லை என்று ஆழ்ந்த கவலையோடு சொன்னார். இந்த அளவு நிலம் இருந்தபோதும் இங்குள்ள தலித் ஏழைகள் அனைவருக்குமே வீட்டுமனை இல்லை. அறிவிக்கப்பட்ட வீட்டுமனைகளும் கூட ஆக்கிரமிப்பில் உள்ளன. கொங்கம்பட்டி செல்லும் வழியில் வலது பக்கத்தில், 14 ஏக்கர் பஞ்சமர் நிலத்தை க்ரானைட் மாபியா பிஆர்பி ஆக்கிரமித்து வைத்துள்ளார். இது பற்றி மேனாள் அய்ஏஎஸ் அதிகாரி சகாயம் அறிக்கையிலேயே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இந்த அறிக்கையை இதற்கு முன்பிருந்த எந்த அரசும் இதுவரை வெளியிடவில்லை. இந்த நிலங்கள், கருவேலம் செடி முளைத்த பாலைவனமாகவே உள்ளன. இப்படி ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு கதை உள்ளது

பழைய யுடிஆர் ஆவணங்கள், ஆதாரபூர்வமான தரவுகளை ஆதாரமாகக் கொண்டு கிராமந்தோறும் நிலங்களை அளவீடு செய்து பஞ்சமி நிலத்தின் அளவை அறிவிக்க வேண்டும்.

எந்த ஆண்டு முதன் முதலாக வழங்கப்பட்டதோ அப்போதிருந்த உரிமையாளரது வாரிசுகளுக்கு மீட்கப்பட்ட நிலத்தை உரிய ஆவணங்களுடன் வழங்கிட வேண்டும்.

க்ரானைட் மாபியா பிஆர்பி முடக்கிவைத்துள்ள நிலங்களை அரசு கையகப்படுத்தி அதிலுள்ள பஞ்சமி நிலத்தை உரிய தலித் மக்களுக்கு ஒப்படைக்க வேண்டும்.

வீட்டுமனை, வீடு பிரச்சனைக்கு முன்னுரிமை அளித்து தலித்துகளுக்கு வீட்டுமனை, வீடு வழங்கிட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, ஜூலை 1 முதல் 6 வரை கிராமங்களில் பரப்புரை இயக்கம் நடத்துவது, 7 அன்று பெருந்திரள் அணிதிரட்டல் செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**தோழர்கள் மெய்யர், திலகர், மதி, சந்திவீரன், முத்துச்சாமி, பஞ்சவர்ணம், புஷ்பம், கலையரசி, பிரியங்கா, சேதுபாண்டி உள்ளிட்ட இன்னும் பலருடன் சென்று மக்களை சந்தித்தன் அடிப்படையில் திரட்டிய தகவல். தொகுப்பு: பாசு**

## ஜூன் 15 முதல் ஜூலை 15 வரை அகில இந்திய அளவில் நடைபெறும் அவிகிதொச உறுப்பினர் சேர்ப்பு இயக்கம் துவங்கியது



# விபி கிராம் ஜி சட்டம் வேண்டாம்;
# மேம்படுத்தப்பட்ட மகாத்மா காந்தி வேலை உறுதிச் சட்டமே வேண்டும்

**- சி. மதிவாணன் -**

அதிகாலையில் எழுந்து, "இன்று உழைத்தால் தான் அடுப்பெரியும்" என்ற நிலையில் வேலைக்குச் செல்லும் கிராமப்புரத் தொழிலாளர், ஒரு ஸ்மார்ட்போன் வழியாகப் படம் எடுத்து அனுப்ப முடியாத தொழில்நுட்பக் கோளாறால் வேலை மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படும் அவலம் இன்று தமிழகக் கிராமங்களில் அன்றாடம் அரங்கேறி வருகிறது. ஊழலை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு அரசால் கொண்டுவரப்பட்டுள்ள புதிய டிஜிட்டல் நடைமுறைகள், ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை எப்படிச் சூறையாடுவதாக மாறியுள்ளன.

**உரிமையாக இருந்த வேலைத்திட்டம்**

2005-ல் கொண்டுவரப்பட்ட மகாத்மா காந்தி வேலை உறுதிச் சட்டம் கிராமப்புர ஏழைகளின் முக்கிய வாழ்வாதாரமாக விளங்கியது. உடல் உழைப்பு தரத் தயாராக இருக்கும் ஒவ்வொரு கிராமவாசிக்கும் குறைந்தது 100 நாட்கள் வேலை, வேலை அளிக்கத் தவறினால் இழப்பீட்டுக் கூலி என அது தொழிலாளரின் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு, வேலைக்கான அனுமதியைப் பெற, தொழிலாளியிடம் ஒரு 'வேலை அட்டை' இருப்பதும், பஞ்சாயத்து நிர்வாகத்திடம் வருகைப் பதிவேடு ஒன்று இருப்பதும் போதுமானதாக இருந்தது.

**புதிய சட்டமும் விபி கிராம் ஜி டிஜிட்டல் திணிப்பும்**

பழைய சட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, நாடாளுமன்றத்தில் விபி கிராம் ஜி என்ற புதிய சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. இதை "வளர்ந்த பாரதம் - ஊரக வேலைவாய்ப்பு, வாழ்வாதார உத்தரவாத இயக்கச் சட்டம், 2025" என்று சொல்கின்றனர். நடப்பு நிதியாண்டில் (2026-2027) நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்ட இச்சட்டம், 125 நாட்கள் வேலை அளிப்பதாகக் கூறினாலும், நிதி ஒதுக்கீட்டையும் வேலை அளிப்பதையும் ஒன்றிய அரசே தீர்மானிக்கும் அதிகாரத்தைக் கையில் எடுத்துள்ளது. இதனால், மகாத்மா காந்தி வேலை உறுதிச் சட்டம் அளித்த "கேட்கும்போது வேலை" என்ற உழைப்பவர்களுக்கான அதிகாரம் பறிக்கப்பட்டுள்ளது. ஒன்றிய, மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலேயே இனி வேலை வழங்கப்படும்; சட்டப்படி அறிவிக்கப்பட்ட 125 நாட்கள் வேலையைக் களத்தில் உள்ள தகுதியான தொழிலாளர் அனைவருக்கும் வழங்க வேண்டுமானால், இத்திட்டத்திற்கு தோராயமாக ₹3.84 லட்சம் கோடி நிதி தேவைப்படும். ஆனால், அதில் பாதியைக் கூட ஒதுக்காமல் 125 நாட்கள் என்று அறிவிப்பது நயவஞ்சக வேலையாகும். 2024-25 ல் சராசரியாக 50 நாள் மட்டுமே வழங்கப்பட்டுள்ள விவரம் நமது கேள்வியை வழிமொழிகிறது.

**டிஜிட்டல் மயமாக்கலும் வேலை உரிமை பறிப்பும்**

NMMS (தேசிய செல்லிடபேசி கண்காணிப்பு முறை) என்ற மொபைல் செயலி முறை கட்டாயமாக்கப்பட்ட பின்னர், 2025-2026 ஆண்டில் வேலை நாட்களில் தமிழ்நாடு அதிகபட்ச வீழ்ச்சியை (42.8%) சந்தித்துள்ளது. ஹரியானா போன்ற பிற மாநிலங்களிலும் (41.7% சரிவு) காணப்பட்டது.

புதிய சட்டத்தில் e-KYC கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 2025 செப்டம்பர் 26 அன்று வெளியிடப்பட்ட அரசாணை (R-13011/3/2025-NIC-DRD), மாநிலங்கள் இந்தப் பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிட்டது. இதன்படி, NMMS செயலி மூலம் தொழிலாளரின் புகைப்படம், விவரங்களை நிகழ்நேரத்தில் ஒப்பிட்டுச் சரிபார்த்தால் மட்டுமே வருகைப் பதிவு சாத்தியம். இவை 'விக்சித் பாரத் தேசிய ஊரக உள்கட்டமைப்பு' உடன் இணைக்கப்படுகின்றன. இது தொழில்நுட்ப வளர்ச்சி போலத் தோன்றினாலும், கள எதார்த்தம் மிகவும் கொடூரமானது. சாரைசாரையாய் வேலைக்குச் செல்வது என்பது தலைகீழாக மாறியுள்ளது. சாரைசாரையாய் வெளியிலிருந்து வேலையிலிருந்து வெளியேற்றப் படுகின்றனர்.

**பறிக்கப்படும் மனித மாண்பும் கள எதார்த்தமும்**

நிர்வாகச் சுற்றறிக்கையின் மூலம் 'முகப்படம் எடுப்பது கட்டாயம்' என அரசுகள் வற்புறுத்துகின்றன. இதனால் ஏற்படும் பாதிப்புகள்:

1. மாற்றுத் திறனாளிகளின் அவலம்: பார்வையற்ற தொழிலாளரும் விழியைத் திறக்க முடியாதவர்களும் கூட கேமராவிற்காகக் கண்களை உருட்டிக் காட்டக் கட்டாயப்படுத்தப்படுவது மனித மாண்பை இழிவுபடுத்துவது. முகப்படம் எடுக்கும் முறையினால் மாற்றுத்திறனாளிகள் பாதிக்கப்படக்கூடாது என்று அரசின் நிர்வாகச் சுற்றறிக்கை சொன்னாலும், நடைமுறையில் அவர்களுக்கு வேலை மறுக்கப்படுவது அதிகரிக்கிறது.

2. தொழில்நுட்பக் கோளாறுகள்: பணித்தளப் பொறுப்பாளரின் செல்போன் திறன் போதாமை, சிக்னல் இல்லாமை, சர்வர் முடக்கம்

போன்றவற்றால் ஒவ்வொரு கிராமத்திலும் நூற்றுக்கணக்கான தொழிலாளர் வேலையின்றித் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

*3. வாழ்வாதார இழப்பு:* காலையிலேயே வேலைக்கு வந்துவிடும் தொழிலாளருக்கு அன்று வேலை மறுக்கப்படுவதால், மாற்று வேலை தேடிச் செல்லும் வாய்ப்பும் பறிபோகிறது.

**பரிசோதனை எலிகளாகும் ஏழைத் தொழிலாளர்!**

அரசியல் சாசனத்தின் 21-வது கூறு ஒவ்வொரு குடிமகனுக்கும் 'வாழ்வாதார உரிமையை' உறுதி செய்கிறது. ஓய்வுபெற்ற நீதிபதி புட்டுசாமி எதிர் இந்திய அரசு (2017) வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, தொழில்நுட்பத்தைப் புகுத்தும் முன் முறையான சட்ட ஏற்பாடுகளும் பாதுகாப்புக் கட்டமைப்புகளும் இருக்க வேண்டும். அதை விடுத்து, அன்றாடக் கூலியை நம்பி வரும் தொழிலாளரை பரிசோதனை எலிகளாக்குவது நியாயமல்ல. வேலைக்கு வந்தவர்களை வெறும் கையோடும் வெறித்த விழியோடும் அனுப்புவது மனிதத் தன்மையற்ற செயல்

தொழில்நுட்பம், மக்களின் சேவகனாக இருக்க வேண்டும். மோடி ஆட்சியில் தொழில்நுட்பம் கிராமப்புர தொழிலாளர் உரிமைகளைப் பறிக்கும் கொடூர எஜமானனாக மாறிவிட்டது.

**தமிழ்நாட்டிற்கான நிதி ஒதுக்கீடு சரிவு**

புதிய விபி கிராம் ஜி திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடைக்கால நிதி ₹7,585.49 கோடி மட்டுமே.

அரசுத் தரவுகளின்படி, தமிழ்நாட்டிற்கான வேலை உறுதித் திட்ட நிதி ஒதுக்கீடு கடந்த மூன்று ஆண்டுகளாகவே தொடர்ந்து பெரும் சரிவைச் சந்தித்து வருகிறது. 2023 - 2024 நிதியாண்டில் ₹12,698 கோடியாக இருந்தது, 2024 - 2025 நிதியாண்டில் ₹10,156 கோடியாக மாறி, 2025 - 2026 நிதியாண்டில் (கடந்த ஆண்டு) ₹5,878 கோடியாக சுருங்கியது.

'நிர்வாகக் கட்டுப்பாடுகள்' மற்றும் டிஜிட்டல் வருகைப்பதிவு (NMMS) போன்ற கெடுபிடிகளால் தொழிலாளர் ஈடுபாடு குறைக்கப்பட்டதே இந்த நிதிச் சரிவுக்கு முதன்மைக் காரணியாகும். புதிய 'நெறிமுறை சார்ந்த ஒதுக்கீட்டு முறை' (Normative Allocation Model) காரணமாக, நடப்பு நிதியாண்டிலும் தமிழகத்திற்கான நிதி ஒதுக்கீடு மேலும் பாதிக்கப்படலாம்.

**நாம் செய்ய வேண்டியது என்ன?**

கிராமப்புரத் தொழிலாளர்களின் வருமானம் கவலை அளிப்பதாக உள்ளது. கிராமப்புரங்களில் உணவு, அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், அவர்களது வாங்கும் திறனும் வாழ்வாதார நிலையும் தேங்கி நிற்கிறது.

இந்தக் கொடூர சட்டத்தால் ஏற்படும் நெருக்கடியை எதிர்கொள்ள, கிராமப்புர மக்களைப் பின்வரும் கோரிக்கைகளின் அடிப்படையில் அணிதிரட்டி, அமைப்பாக்கிப் போராட வேண்டும். மக்களின் போராட்டம் தரும் நெருக்கடி அதிகரிக்கும்போது மட்டுமே நமக்கான வேலை நாட்களும், கூலியும் முறைப்படி வந்து சேரும்.



நமது முதன்மைக் கோரிக்கைகள்:

1. மக்களின் வேலையையும், கூலியையும், உரிமைகளையும் பறிக்கும் 'விபி ஜி ராம் ஜி' சட்டத்தை உடனே திரும்பப் பெற வேண்டும். ஆண்டுக்கு 200 நாள் வேலை, நாள் ஊதியம் ₹700உடன் மேம்படுத்தப்பட்ட மகாத்மா காந்தி தேசிய கிராமப்புர வேலை உறுதிச் சட்டத்தை மீண்டும் கொண்டுவா!

2. டிஜிட்டல் முகப்படம் எடுப்பதையும், பயோமெட்ரிக் முறைகளையும் உடனடியாக ரத்து செய்! வேலை கேட்கும் அனைவருக்கும் தடையின்றி வேலை கொடு!

3. தொழில்நுட்பக் கோளாறால் திருப்பி அனுப்பப்பட்ட தொழிலாளருக்கு, வருகைப் பதிவேட்டில் பெயர் இருந்தால், விடுபட்ட நாட்களுக்கான முழு ஊதியத்தையும் வழங்க வேண்டும்.

4. e-KYC போன்ற தயாரிப்புப் பணிகளைத் தொழிலாளரின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் தனியே மேற்கொள்ள வேண்டும்.

ஜூன் 15 முதல் ஜூலை 15 வரை அகில இந்திய அளவில் நடைபெறும் அவிகிதொச உறுப்பினர் சேர்ப்பு, பரப்புரை கிளர்ச்சி இயக்கத்தின் போது இந்தக் கோரிக்கைகளுடன் கிராமப்புர தொழிலாளரை பெரும் எண்ணிக்கையில் சந்திக்க வேண்டும். அமைப்பாக்க வேண்டும். கிளர்ச்சியில் அணிதிரட்ட வேண்டும். மோடி ஆட்சிக்கு எதிராக சக்திமிக்க எதிர்ப்பைக் காட்ட வேண்டும். கோடிக்கணக்கான தமிழக கிராமப்புர தொழிலாளரின் குரலாக தவெக அரசாங்கம், சட்டப்பேரவை தீர்மானம் நிறைவேற்றி மோடி அரசை வற்புறுத்த வைக்க வேண்டும்.

# தவெக எழுச்சி : இளைஞர்கள் பங்கு!

**- சந்திரமோகன் -**

**வெற்றிடத்தை காற்று நிரப்பும்**

மொழிப்போர், வளாக மாணவர் அரசியல் மூலம் வளர்ந்து ஆட்சியைப் பிடித்தது திராவிட அரசியல். கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டின் அரசியலில் திமுகவும் அதிமுகவும் கோலோச்சி வந்தன. திராவிட அரசியல் என்ற பின்னணியில் தோன்றிய இக்கட்சிகள் மாணவர், இளைஞர்களுக்கு அரசியல் வேண்டாம் என்றன. கட்சி அரசியலுக்கு மட்டுமே மாணவர் இளைஞர்களை பயன்படுத்திக் கொண்டன. ரசிகர் மன்றங்களாக வைத்துக் கொள்வதிலேயே குறியாக இருந்தன.

கல்வி, மருத்துவம் தொடங்கி அனைத்திலும் திமுக, அதிமுக ஆட்சிகள் செயல்படுத்திய நவதாராளப் பொருளாதாரக் கொள்கைகள் தீவிர ஏற்றத்தாழ்வை உருவாக்கின. சமூகத்தில் புதிய பிளவுகளை ஏற்படுத்தின. மாறி மாறி மாநிலத்தில் அரியணை ஏறிய திமுக - அதிமுக கட்சிகள் இந்தப் பிரச்சனையை கவனிக்கத் தவறின. மாணவர்கள், இளைஞர்கள் மாற்று பற்றி சிந்திக்கத் தொடங்கினர்.

கருணாநிதி எதிர் ஜெயலலிதா' என்ற இருதுருவ அரசியல் கட்டமைப்புக்குள் சிக்கி கிடந்தது திராவிட அரசியல். இதனால் அதிருப்தி அடைந்த இளைய சமுதாயம் இக்கட்சிகளிடமிருந்து விலகத் தொடங்கின. மதிமுக, தேமுதிக, நாதக போன்ற கட்சிகள் ஓரளவுக்கு மாணவர், இளைஞர்களை ஈர்த்தன. என்றாலும் அவற்றின் திராவிடபாணி அரசியல் இளைஞர்களுக்கு சலித்துப்போய் விட்டது. இன்றைய அரசியல் பொருளாதார சூழல், வேலையில்லாத் திண்டாட்டம், நிரந்தரமற்ற பணிநிலை, சரியும் கூலி, நிச்சயமற்ற வாழ்க்கை நெருக்கடி, பறிபோகும் வாழ்வாதாரம், ஆட்சியாளர்களின் அடக்குமுறைகள் போன்றவை இளைஞர்கள் மத்தியில் ஆட்சியாளர் மீது கடும் அதிருப்தியை, எதிர்ப்புணர்ச்சியை உருவாக்கி யிருந்தன.

தமிழகத்தில், இடதுசாரிகள் புகழ்மிக்க வரலாற்று பாரம்பரியத்தைக் கொண்டிருந்தனர். ஆனாலும் அண்மைய சில பத்தாண்டுகளில் இடதுசாரி சிந்தனையை மாணவர், இளைஞர் அரசியலாக மாற்றுவதில் பெரிய வெற்றிபெற முடியவில்லை. புரட்சிகர அரசியலால் உத்வேகம் பெற்ற 60கள், 80கள், 90 களின் மாணவர் அரசியல், புதிய காட்சிகளை அரங்கேற்றின. சர்வாதிகார எம்ஜிஆர் ஆட்சி மாணவர் போராட்டங்களின் முன் பணிந்து போக வேண்டியிருந்தது. கல்லூரிகளில் மாணவர் பேரவையை ஒழித்துக் கட்டியதில் எம்ஜிஆருக்கு முதன்மைப்பங்குண்டு. இந்த வெற்றிடத்தை நிரப்ப வேண்டிய கடமையை இடதுசாரிகள், முற்போக்கு சக்திகளால் நிறைவேற்ற முடியவில்லை.

அதிகரித்த அளவில் திராவிடக் கட்சிகள் சார்ந்த அரசியல், Gen Z இளம் தலைமுறையினரை முக்கியமானதொரு அரசியல் பங்கேற்பாளர்கள் என்ற வகையில் கவனத்தில் எடுத்துக் கொண்டு அணிதிரட்டாமல் இடதுசாரிகள்

தனிமைப்பட்டனர். கடந்த பத்தாண்டுகளில், கூடங்குளம் எதிர்ப்பு, மீதேன், ஈதேன் திட்ட எதிர்ப்பு, நெடுவாசல் போராட்டம், ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்பு, டங்க்ஸ்டன் எதிர்ப்பு உள்ளிட்ட கார்ப்பரேட் எதிர்ப்புப்போராட்டங்கள், மக்கள் நல்வாழ்வு சார்ந்த டாஸ்மாக் எதிர்ப்புப் போராட்டம், பண்பாட்டு அடையாளமான மெரீனா சல்லிக்கட்டு எழுச்சி இவற்றில் மாணவர் இளைஞர் பல்லாயிரக்கணக்கில் முன்னணி அணிவரிசையில் கலந்து கொண்டனர். திமுக-அதிமுக ஆதிக்கம் செலுத்தும் அரசியல் களத்தில், கட்சி சாராத மக்கள் திரள் போராட்டங்களில் பேரார்வத்துடன் இளைஞர்-மாணவர் கலந்து கொண்டனர். அண்மையில் வெற்றிகரமாக நடந்து முடிந்த தூய்மைப்பணியாளர் போராட்டத்திலும் ஆர்வம் காட்டினர். திராவிட கட்சிகளிடமிருந்து விலகிய மாணவர் இளைஞர்களின் ஒரு இடைக்கால தேடுதலாக இவை இருந்ததை புரிந்து கொள்ள வேண்டும். அது ஒரு குறிப்பிட்ட சூழலில் தவெகவில் வந்து முடிந்துள்ளது.

**விஜய்க்குப் பின்னால் இளைஞர்கள்**

தவெக பின்னால், இளைஞர்கள் அணிதிரண்டது வெறும் சினிமா ரசிக மனப்பான்மையால் மட்டுமல்ல. Gen Z தலைமுறை இளைஞர்கள், பொதுவான மரபார்ந்த அரசியல் செயல்பாட்டில் இயங்கவில்லையே தவிர, அவர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களும் அல்ல. ஆனால், அரசியலை அவர்கள் அணுகும் வழிமுறை வேறுபட்டுள்ளது. உச்சகட்ட ஊடக தொழில்நுட்பம், நிச்சயமற்ற தன்மை, முற்றிலும் புதிய பண்பாட்டு வேட்கை கொண்ட புதிய தலைமுறையின் சிந்தனைக்கும் செயலுக்கும் டிஜிட்டல் உலகம் பெரும் போராட்டக் களமாக மாறியது. எனவே தான், தவெக திட்டமிட்டு கட்டமைத்த டிஜிட்டல் பரப்புரை அவர்களை முழுமையாக சென்றடைந்து, வாக்குகளாக மாற்றியது.

கடந்த மூன்றாண்டுகளில், விஜய் அரசியலுக்கு வந்தபிறகு, திமுக, அதிமுக போன்ற கட்சிகளைச் சாராத 20கள், 30கள் வயதுகளில் இருக்கும் கணிசமான இளைஞர்கள் விஜய்க்கு ஆதரவாக நேரடியாகவும், மறைமுகமாகவும் 'தேர்தல் அரசியலில்' இறங்கினர். ஆள் மாற்றம் - ஆட்சி மாற்றம், வாரிசு அரசியல் - ஆட்சியாளர் கொள்ளை, ஊழல் - இலஞ்ச ஒழிப்பு, பெண்கள் பாதுகாப்பு, போதை ஒழிப்பு என்ற அரசியல் பேசினார்கள். விஜய் கட்டமைத்த மொத்த அரசியல் பரப்புரையும், 'இன்றைய, நேற்றைய ஆட்சியாளர்கள் மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது' என்பதாகவே இருந்தது. தவெக அரசியல், பொருளாதாரம் அடிப்படை மாற்றம் பற்றி எதுவும்

பேசுவதில்லை! மற்றொரு கார்ப்பரேட் ஆதரவு கட்சியாகவே தெரிகிறது. ஆனாலும் இளைஞர், மாணவர்கள் "வரவேற்கத் தக்க மாற்றமாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சமூகநீதி பேசிய திமுக ஆட்சியில், தலித்துகள் மீது நீடித்த ஒடுக்குமுறை, அமலாக்கப்படும் கார்ப்பரேட் பெருமுதலாளித்துவ திட்டங்கள், போராட்டங்கள் மீதான அரச அடக்குமுறைகள் பற்றி இளைய தலைமுறையினர் தீவிரமாக விவாதித்தனர்; பிறகு அது விஜய் ஆதரவு அரசியல் ஆக உருவாகியது. தமிழக வெற்றிக் கழகம் தமிழ்நாட்டின் பெரும்பான்மை இளைஞர்களின் நம்பிக்கையை பெற்றதுடன், நாதக, விசிக, பாஜக, திமுக, அதிமுக, இடதுசாரி கட்சிகள் சார்ந்த இளைஞர்கள் மத்தியிலும் தனது செல்வாக்கை விரிவுபடுத்திக் கொண்டது.

தலைநகர் தில்லியில், வட இந்தியாவில் RSS மாணவர் அமைப்பு ABVP இந்துத்துவ அரசியல் - கருத்தியல் அடிப்படையில் மாணவர்களை திட்டமிட்டு அரசியல்படுத்தி வருகின்றது. அதேபோல், AISA, SFI, AISF, உள்ளிட்ட பல்வேறு இடதுசாரி மாணவர் சங்கங்களும் மாணவர்களிடையே அரசியல், கருத்தியல் அணிதிரட்டும் பணிகளைச் செய்து வருகிறார்கள்.

திமுக, அதிமுக கட்சிகளுக்குள் மாணவர், இளைஞர் பயிற்சி முகாம்கள் நடைபெற்றதே தவிர, கல்லூரி வளாகங்களில் கொள்கை சார்ந்த அரசியல் விவாதங்கள் நடைபெறவில்லை. விளைவாக, மாணவர்கள் படிப்படியாக அரசியலில் இருந்து அந்நியப்பட்டவர்கள் ஆயினர். கல்லூரி கலை கலாச்சார நிகழ்ச்சிகள், பண்டிகைத் திருவிழா நிகழ்ச்சிகளில் கேளிக்கைகளும், பிற்போக்கு கருத்துகளும் மேலோங்கி, முற்போக்கு பண்பாட்டு விழுமியங்கள், அரசியல், கருத்தியல் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டன.

**மாணவர் அரசியல் எழட்டும்!**

தமிழ்நாட்டின் மாணவர்-இளைஞர் ஜனநாயக போராட்ட மரபின் தொடர்ச்சியாக, உண்மையான புரட்சிகர எழுச்சிக்கு வருங்காலத் தலைமுறையினரை, இளைஞர், மாணவர்களை, தயார்படுத்த வேண்டும். சமூக மாற்றத்திற்கான நமது புரட்சிகர அரசியலை அவர்கள் மத்தியில் பெரிய அளவில் நெருங்கி கொண்டு செல்லவேண்டும். இடதுசாரி பாதையிலான மாணவர் இளைஞர் அரசியலுக்குப் புத்துயிர் அளிக்க வேண்டும். இந்தப் பணிகளை செய்துமுடிக்க வேண்டியது புரட்சிகர இளைஞர், மாணவர் முன்னோடிகளின் வரலாற்றுக் கடமையாகும். இளைஞர்கள் எப்போதும் துடிப்பானவர்கள், மாற்றத்தை விரும்புகிறவர்கள். அவர்கள், மாற்றத்தின் தூதுவர்கள். அவர்களை திரட்டும்பணியில், முதன்மையானது, பகுத்தறிவு சமூக உணர்வு, புரட்சிகர விழிப்புணர்வு. முன்முயற்சி மிக்க செயல்துடிப்பு. இவற்றைக் கொண்டு ஜென் ஸி தலைமுறையை கட்டி எழுப்புவதில்தான் வெற்றிக்கான இறுதித் திறவுகோல் உள்ளது.

# விவசாயம் செழிக்க; விவசாயிகள் வளம் பெற மாநிலத்திற்கு சொந்தமான நீர் மேலாண்மை திட்டங்கள் வேண்டும்

**– சிம்சன் –**

மேக்கேதாட்டு அணை கட்டும் அச்சுறுத்தல் தமிழக விவசாயிகளை மீண்டும் வீதிக்கு கொண்டு வந்துள்ளது. தஞ்சையில், இடதுசாரி கட்சிகள் உடனடியாக கண்டனக் குரலெழுப்பி தமிழ்நாட்டின் கோரிக்கையை வலுவாக எழுப்பின.

தமிழ்நாட்டின் நீர் தேவையான 1664 டிஎம்சியில், 261 டிஎம்சி (15%) அண்டை மாநிலங்களான கர்நாடகா, கேரளா, ஆந்திராவை நம்பி உள்ளது. பாரம்பரியமாகவே நீர் பற்றாக்குறை மாநிலமாகவே இருந்து வருகிறது. எனவே நமது சொந்த நீர் ஆதாரத்தை வலுப்படுத்துவது அதிக முக்கியத்துவம் பெறுகிறது. தமிழ்நாடு, 90 விழுக்காடு மேற்பரப்பு நீரையும் 80 விழுக்காடு நிலத்தடி நீரையும் பயன்படுத்துகிறது. தமிழ்நாட்டில் 41,127 கண்மாய்கள், ஏரிகள், குளங்கள் இருந்ததையும் 18.26 லட்சம் ஆழ்குழாய் கிணறுகள் இருப்பதும் 2239 கால்வாய் வழி பாசனம் இருப்பதும் மேற்கண்ட நிலைமைக்கு புள்ளி விவரங்கள் அடிப்படையிலான பதிலாகும்.

பல பத்தாண்டு கால நீதி மன்ற வழக்குகள், இருதரப்பு பேச்சுவார்த்தைகள், பலமுறை போராட்டங்கள், டெல்டா மாவட்டங்களில் கம்யூனிஸ்ட்கள் நடத்திய லட்சத்துக்கும் மேற்பட்டோர் கரம் கோர்த்து நின்ற மனிதச் சங்கிலி போராட்டத்துக்குப் பிறகு காவிரி நடுவர்மன்ற தீர்ப்பு என்பது வரலாறு. உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி காவிரியில் இருந்து கூடுதலாக 177 டி.எம்.சி நீர் தமிழகத்திற்கு கிடைத்தாலும் பற்றாக்குறை நீடிக்கவே செய்கிறது. இப்போது மேக்கேதாட்டு பூமி பூஜை, அதையும் பறித்து விடுமோ என்ற பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தை ஆண்ட கட்சிகள் கார்ப்பரேட்மய பொருளாதாரக் கொள்கைகளையே பின்பற்றின. நகர்ப்புர மயமாதலே மாநிலத்தின் வளர்ச்சி எனவும் பெருமை பேசிக் கொண்டனர். இயற்கைக்கு மாறாக நகர்மயமாதலை உருவாக்கி அதன் மூலம் கொள்ளையடித்தனர். இதனால் கிராமத்தின் விவசாயத்தையும் விவசாயிகளையும் புறக்கணிப்பதோடு விவசாயத்திற்கான நீர் மேலாண்மைத் திட்டங்களையும் கிடப்பில் போட்டனர். எந்தவொரு நீராதாரக் கொள்கைகளை வகுப்பதோ, திட்டமிடுவதோ இல்லாமல் தமிழகத்தை 60 ஆண்டுகளாக வஞ்சித்துள்ளனர்.

மழைநீர் சேமிப்பு மேலாண்மை

மழைக் காலங்களில் நீரைத் தேக்கி வைக்க திட்டம் எதுவும் அரசிடம் இல்லை. இதனால் ஆண்டிற்கு 140–200

டி.எம்.சி நீர் வீணாகக் கடலில் கலக்கிறது. தமிழ்நாட்டின் கண்மாய், குளங்கள், ஏரிகள் அனைத்தும் தூர் வாரப்படாமல் இருக்கின்றன். மேலும் ஆற்று மணல் குவாரிகள் ஆறுகளை சாகடித்து விட்டன. பல லட்சம் கோடி, வணிகக் கொள்ளை நடக்க அரசே வழிவகை செய்துள்ளது. இதனால் நிலத்தடி நீர், சுற்றுச்சூழல் பாதிப்புக்குள்ளாகிறது.

ஆட்சிக்கு வந்துள்ள த.வெ.க அரசு, 30 லட்சம் ஏக்கர் விளைநிலங்களை அதிகப்படுத்தப் போவதாக அதன் தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ளது. தீராத காவிரிப் பிரச்சினை, மணற்கொள்ளை, மழைநீர் மற்றும் வெள்ளக் காலங்களில் நீரைச் சேமிக்காத அலட்சியம், நீர்த் தேக்கங்கள் மண் மற்றும் கழிவுகளால் மாசடைந்திருப்பதை அலட்சியப்படுத்தும் நிர்வாகச் சீர்கேடு, இவற்றால் தற்போது பயன்பாட்டிலுள்ள விளை நிலங்களுக்கே நீர் பற்றாக்குறை உள்ளது. விரிவாக்கப்படும் விளைநிலங்களுக்கு குறைந்தபட்சம் 150 டிஎம்சி தண்ணீர் வேண்டும். எங்கிருந்து நீர் ஆதாரத்தை உருவாக்கப் போகிறது தவெக அரசு?

**தண்ணீரைக் காணாத திட்டங்கள்?**

1.தாமிரபரணி–நம்பியாறு–கருமேனியாறு ஆகிய மூன்று ஆறுகளின் இணைப்பு;

2.காவிரி – வைகை– குண்டாறு இணைப்பு.

பொதிகை மலையில் உற்பத்தியாகி நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்கள் வழியாக 130 கி.மீ ஓடி புன்னக்காயல் வழியாக வங்கக் கடலில் கலக்கிறது. நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களின் குடிநீர், விவசாயத் தேவைகளை நிறைவு செய்வது தாமிரபரணி ஆறுதான். மழைக் காலங்களில் 40% மழைநீர் வீணாகக் கடலில் கலப்பதாக புள்ளி விபரங்கள் சொல்கின்றன. இது கிட்டதட்ட 15 டி.எம்.சி– ( 1 டி.எம்.சி என்பது 11 ஆயிரம் கன அடி நீராகும்) 20 டி.எம்.சி யாகும். தாமிரபரணியால் நெல்லை மாவட்டத்தில் 40,000 ஏக்கரும், தூத்துக்குடி மாவட்டத்தில் 16,107 ஏக்கரும் பாசனம் பெறுகின்றன. நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களின் குடிநீர் தேவைக்கும் தாமிரபரணியே உயிராதாரமாய் உள்ளது. இது வடக்கு கோடை மேலழகியான் தொடங்கி, ஸ்ரீவைகுண்டம் தென்கால் வரை பதினோரு சிறிய அணைக்கட்டுகள், கால்வாய்கள் வழியாக வங்கக் கடலுக்குள் செல்கிறது. தாமிரபரணியின் கடைசி அணைக்கட்டு ஸ்ரீவைகுண்டம். எட்டு அடி உயரமே உள்ள இந்த அணையில் 6 – 7 அடி வரை சேறும் சகதியும் தேங்கியிருக்கிறது. சிறிய மழை விழுந்தால் கூட, உபரி நீர் முழுவதும் வெளியேறிவிடும். இதன் கீழ் உள்ள 53 குளங்களின் நிலையும் இதே கதிதான். இந்த அணையையும் இதற்குட்பட்ட குளங்களையும் தூர் வாரி, வீணாகச் செல்லும் மழை நீரைத் தேக்கி வைத்து ஆண்டு முழுவதும் பயன்படுத்த முடியும். ஆனால், ஆண்டுதோறும் 20 டி.எம்.சி தண்ணீர் கடலில் கலக்கிறது.

ஆத்தூர் அருகே தடுப்பணை அமைத்தால் குடிநீர் திட்டங்களுக்கு அங்கிருந்தே தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம் என்ற விவசாயிகளின் ஆலோசனையும் அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

வீணாகச் செல்லும் கடல் நீரை திசையன்விளை, சாத்தான்குளம் பகுதிக்கு கொண்டு செல்வதற்காக நாட்டிற்கே முன்னோடியாக ரூ 369 கோடியில் தீட்டப்பட்ட தாமிரபரணி–நம்பியாறு– கருமேனியாறு ஆகிய மூன்று ஆறுகளின் நதிநீர் இணைப்புத் திட்டமும் ஆட்சியாளர்களின் கவனிப்பின்றி கிடக்கிறது. 1992ஆம் ஆண்டு ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் போது மட்டுமே வீணாக கடலுக்குள் சென்ற நீரின் அளவு கிட்டத்தட்ட 120 டி.எம்.சியாகும். விவசாயிகளின் நெஞ்சே பதை பதைக்கிறது. அவ்வளவு தண்ணீரையும் கடலுக்கு அனுப்பி விடுவதால் முன் கார், கார், பிசானம் என ஆண்டுக்கு மூன்று போகம் விவசாயம் செய்த நெல்லையும், தூத்துக்குடியும் இன்று ஒரு போக விவசாயத்திற்கே திண்டாடுகிறது. போதாக் குறைக்கு ஆற்றிலேயே வளர்ந்து மிதக்கும் அமலைச் செடிகள் வேறு தண்ணீரை வீணாக்கி வருகின்றன. ஆற்றை சுத்தமாக்கி கழிவு நீர் கலக்காமல், அணையையும் தூர் வாரி ஆழப்படுத்தினாலே தண்ணீரை தேக்க முடியும்.

காவிரி–வைகை–குண்டாறு

காவிரி– வைகை –குண்டாறு இணைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் காவிரி உபரி நீரை கரூர் மாவட்டம், மாயனூர் தடுப்பணையில் தடுத்து திருச்சிராப்பள்ளி, தஞ்சை, புதுக்கோட்டை, சிவகங்கை, விருதுநகர் மாவட்டங்களின் வறண்ட பகுதிகள் வழியாக குண்டாற்றுடன் இணைப்பதன் மூலம் இப்பகுதிகள் நீர் வளமும், நில வளமும் பெறும். காவிரி – வைகை – குண்டாறு இணைப்புத் திட்டத்தின் முதல் கட்டமாக ரூ 6,941 கோடி மதிப்பில் கால்வாய்கள் தோண்ட பிப்ரவரி 2021ல் அன்றைய ஆட்சியாளர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அன்றே இத்திட்டத்திற்கு கர்நாடகா அரசு எதிர்ப்புத் தெரிவித்தது.

இந்தத் திட்டத்தின் மூலம் கரூர், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் 342 ஏரிகளும், 42,170 ஏக்கர் நிலங்களும் பயன் பெறும்.

இரண்டாவது கட்டத்தில் புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் 220 ஏரிகளும், 23,245 ஏக்கர் நிலங்களும் பயன் பெறும். மூன்றாவது கட்டத்தில் விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டங்களில் 492 ஏரிகள், 44,547 ஏக்கர் நிலங்களும் பயன்பெறும் வகையில் 34 கி.மீ நீளத்திற்கு புதிய பாசனக் கால்வாய்கள் வெட்டி, வைகை முதல் குண்டாறு வரை இணைக்கப்படுகிறது.

இத்திட்டத்தினால் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ரூ 14,400 கோடியில் 262 கி.மீ தொலைவிற்குட்பட்ட இத் திட்டத்தின் மூலம், 6,300 மில்லியன் கன அடி தண்ணீர் கடலுக்குச் செல்லாமல் உற்பத்திக்காகத் திருப்பப்படுவதால் தென் மாவட்டங்களில் நிலத்தடி நீர் அதிகரிக்கும்; குடிநீர் பஞ்சமும் வெகுவாகக் குறையும்.

காவிரி துணை வடிநிலத்திலுள்ள உள் கட்டமைப்புகளில் விரிவாக்கம், புதுப்பித்தல், நவீனப்படுத்தும் திட்டம், ரூ 3,384 கோடியில் செயல்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம் தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் 987 கி.மீ நீளமுள்ள 21 ஆறுகளின் பாசனப் பரப்பான 4,67,345 ஏக்கர் நிலங்களுக்கு பாசனம் உறுதி செய்யப்படும்.

காவிரி நீருக்காக நாம் போரிடும் அதே நேரத்தில் காவிரியில் ஏற்படும் வெள்ள நீர் வெறுமனே கடலில் வடிந்து நூற்றுக்கணக்கான டி.எம்.சி நீர் வீணடிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் மொத்த புவியியல் பரப்பளவு 130.33 லட்சம் ஹெக்டர் ஆகும். 1047 கி.மீ நீளமுள்ள கடலோரப் பகுதி பருவகால ஏற்ற இறக்கங்களால் பெரிதும் பாதிக்கப்படக் கூடியது. வேளாண்துறையில் நிச்சயமற்ற

தன்மையை ஏற்படுத்துகிறது. தமிழ்நாடு ஒரு கீழ்நிலை ஆற்று மாநிலம் என்பதால் அது தண்ணீரைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. மழைப்பொழிவு, அதன் பரவல் முறையை மட்டுமே முழுமையாகச் சார்ந்துள்ளது. பருவமழை அதன் நீர் வளங்களை நிரப்புவதற்குப் பெய்கிறது. அதன் மூலம் பருவமழை தோல்விகள், கடுமையான தண்ணீர் பற்றாக்குறைக்கும் தீவிர வறட்சிக்கும் வழி வகுக்கின்றன. நமது மாநிலம் மேற்கு தொடர்ச்சி மலைகளின் மழை மறைவுப்பகுதி என்பதால், நாட்டின் மற்ற பகுதிகளுக்கு கிடைப்பதுபோல் பருவமழை நமக்கு கிடைப்பதில்லை. மழைப் பொழிவில் ஏற்படும் இடஞ்சார்ந்த, காலஞ் சார்ந்த மாறுபாடுகள், பங்கீடு முறை மாநிலத்தின் பயிர் சாகுபடிக்கு மேலும் பல சிக்கல்களைச் ஏற்படுத்துகிறது. கிடப்பிலுள்ள தாமிரபரணி – நம்பியாறு – கருமேனியாறு திட்டத்தையும், காவிரி – வைகை– குண்டாறு இணைப்புத் திட்டத்தையும் ஆட்சியாளர்கள் விரைந்து செயல்படுத்திட வேண்டும். உணர்ந்து செயல்படுத்தினால் விவசாயம் வளரும், விவசாயிகள் வாழ்வில் ஒளி பிறக்கும்.

## ரூ.25 கோடி மதிப்புள்ள அரசு நிலம் மீட்பு!

திருவள்ளூர் மாவட்டம், ஒரக்காடு ஊராட்சிக்கு உட்பட்ட சர்வே எண் 26ல் அரசுக்கு சொந்தமான கிராம நத்தம் நிலம் 14.50 ஏக்கரை பொன்வண்டு, ஜெயா சோப் கம்பனி முதலாளி திரு. சரவணன், முறைகேடாக ஆக்கிரமித்து வைத்திருந்தார். தனது குடும்ப உறுப்பினர்கள் 4 பேர் மீது பட்டா போட்டு வைத்திருந்தார். இந்திய மக்கள் முன்னணி காலந் தொட்டு 20 ஆண்டுகளுக்கும் மேலாக நடத்திய தொடர் போராட்டங்கள் காரணமாக அந்த ஆக்கிரமிப்புகளை வருவாய்த்துறை அதிகாரிகள் அகற்றினர். ஆக்கிரமிப்பு நிலத்தில் கட்டப்பட்டிருந்த கட்டடங்களையும் மாவட்ட நிர்வாகம் இடித்து தள்ளிவிட்டது. இந்தப் போராட்டங்களின் விளைவாக ஒரக்காடு ஊராட்சித் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு வெற்றிபெற்றோம். தோழர் தெய்வராணி ஊராட்சித் தலைவராக செயல்பட்டார். அப்போது ஊராட்சித் தீர்மானங்கள், போராட்டங்கள் காரணமாக இந்த ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது.

அந்த தனியார் முதலாளி, நீதிமன்றத்திற்கு தவறான தகவல் கொடுத்து தடை உத்தரவு பெற்றார். அந்தத் தடை உத்தரவுக்கு எதிராக (அரசு தரப்பிலும்) வழக்கு தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. நமது தரப்பில் தோழர் கு. பாரதி உள்ளிட்டோர் வழக்கு நடத்தி வருகின்றனர். ஒரக்காடு ஜமீனிடமிருந்து கேகேஆர் சேம்பர் முதலாளிக்கு கைமாறிய இந்த நிலத்தை, ஜெயா சோப் முதலாளி சரவணன் சேம்பர் முதலாளியிடமிருந்து சுமார் 130 ஏக்கர் நிலத்தை வாங்கியுள்ளார். இந்த நிலத்தோடு ஒட்டியுள்ள 21 ஏக்கர் அரசு கிராம நத்தம் நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டார். இதனுடைய இன்றைய மதிப்பு சுமார் ரூ100 கோடி. வழக்கு நிலுவையிலிருக்கும் இந்த நிலத்தில் குடியேறிவிடலாம் என மக்களிடம் ஆசை வார்த்தை கூறி, திமுக பிரமுகர்கள் 15 லட்சத்துக்கு மேல் வசூலித்து ஏமாற்றி விட்டனர்.

நீதிமன்ற இடைக்கால தடையைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்த பொன்வண்டு சோப் முதலாளி, ஒரக்காடு தலித் மக்கள் வசிப்பிடத்துக்கு பக்கத்தில் உள்ள 4.50 ஏக்கர் கிராம நிலத்தை 2026 மே மாதம் 16 ஆம் தேதியன்று மண்ணை நிரப்பி ஆக்கிரமிக்க முயற்சித்தார். செய்தி கிடைத்தவுடன் நமது இயக்கத் தோழர்கள் திரண்டனர். முதலாளியின் ஆக்கிரமிப்புக்கு எதிராக 19.05.2026 காலை 10 மணிக்கு கிராம நிர்வாக அலுவலகத்தை முற்றுகை செய்யப்போவதாக துண்டறிக்கை வெளியிட்டு அறிவித்தோம். போராட்டத்திற்கு தயராகிக் கொண்டிருந்த நிலையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போராட்டத்திற்கு முதல் நாள், குட்டையை தடுத்து எழுப்பியிருந்த தடுப்பை, இரண்டு ஜேசிபிகளை கொண்டு உடைத்து தேங்கியிருந்த தண்ணீரை வெளியேற்றினர். இந்தத் தடுப்பு உடைக்கப்படாமலிருந்தால் மழைக்காலத்தில் தண்ணீர் குடியிருப்புகளில் புகுந்து சேதப்படுத்தி விடும். இதனால் நமது முயற்சியை மக்கள் பாராட்டினர்.

திட்டமிட்டபடி, 19 அன்று கிராம நிர்வாக அலுவலகத்தை முற்றுகையிடச் சென்றபோது அங்கு தயார் நிலையில், இருந்த வருவாய்த்துறை அதிகாரிகள் சோழவரம் ஒன்றிய ஆணையாளர் (BDO) காவல்துறை அதிகாரிகள், நமது போராட்டக் குழுவை பேச்சுவார்த்தைக்கு அழைத்தனர். நாம் வைத்த கோரிக்கைகளில், அந்த 4.50 ஏக்கர் நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றி அந்த நிலம் அளவீடு செய்து மீட்கப்படும் என்றும் அந்த பள்ளத்தில் தடுப்பை அகற்றி மழைக் காலங்களில் பாதிப்பு ஏற்படாமல் தண்ணீர் வெளியேற கோட்டாட்சியர் மூலம் அமைதிக் குழு ஏற்படுத்தி நிரந்தர தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் உறுதி அளித்தனர். மேலும் நாம் சுட்டிக் காட்டிய இன்னும் சில நான்கு இடங்களில் (தனியார் நிறுவனம்) ரியல் எஸ்டேட்காரர்கள் ஆக்கிரமித்துள்ள சுமார் 2 ஏக்கர் நிலத்தை அளவீடு செய்து அந்த நிலத்தில் அரசுக்கு சொந்தமானது என்று பெயர் பலகை வைக்கவும் வலியுறுத்தினோம்.

இதை ஏற்று, உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் உறுதி அளித்தனர். மேலும் ஒரக்காடு காலனிக்கு மேற்கு பகுதியில் இருந்து வரும் மழைநீரை, வடிகால் அமைத்து வெளியே கொண்டு செல்ல வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், இரண்டு நாட்களில் அதற்கான பணிகளைத் தொடங்குவதாகவும் உறுதி அளித்தனர். அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதென்று அதிகாரிகள் கூறியதன் பேரில் நாம் தற்காலிகமாக போராட்டத்தை தள்ளி வைத்துள்ளோம். இது நமது தொடர் போராட்டத்திற்கு கிடைத்த உடனடி வெற்றியாகும். இது மக்கள் மத்தியிலும் நமது அணிகள் மத்தியில் பெரிய உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தப் போராட்டங்களில், சிபிஐ(எம்-எல்), உழைப்போர் உரிமை இயக்கம் (UUI), எல்டியுசி-ஏஐசிசிடியு முன்னணிகளும் தலைவர்களும் ஒரக்காடு கிராம பொதுமக்களும் சிறப்பான பங்களித்தனர். நிலுவையிலுள்ள வழக்கு நிலத்தை போராடும் மக்களுக்கு ஆதரவாகப் பெற்று, வீடு இல்லாத ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனை பெற்றுத் தர இங்குள்ள கட்சியும் வெகுமக்கள் அமைப்புகளும் தயாராக உள்ளன. போராட்டம் தொடர்கிறது! — எஸ். ஜானகிராமன்

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted at Egmore RMS/1 Published on 1st and 16th of every month R.DIS: 2804/17




மின்வாரியத்தில் பணி செய்த இகக(மாலெ) மாநிலக்
குழு உறுப்பினர் தோழர் எம். பால்ராஜ் தனது ஓய்வூதிய பணத்தில்
இருந்து மாலெ தீப்பொறி பத்திரிகைக்கு முதன்மை ஆசிரியர் மற்றும்
இகக(மாலெ) அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்
வீ. சங்கரிடம் மாநிலக்குழுவில் ரூ.50.000 நிதி வழங்கினார்.
அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் எஸ்.குமாரசாமி.
மத்தியக்குழு உறுப்பினர் அ.சந்திரமோகன்.
மாநிலச் செயலாளர் பழ. ஆசைத்தம்பி. மின்வாரிய சங்கத் தலைவர்
முருகன் அருகில் உள்ளனர்.



10 ரூபாய் வேண்டாம். பணி நிரந்தரம் வேண்டும் எனக் கோரி 23 ஆண்டுகளாக
தற்காலிகப் பணியாளர்களாக உள்ள டாஸ்மாக் தொழிலாளர்கள் குடும்பத்துடன்
16.6.2026 அன்று சென்னை இராஜரத்தினம் ஸ்டேடியத்தில்
உண்ணாநிலை போராட்டம் நடத்தினர். போராட்டத்திற்கு தமிழ்நாடு டாஸ்மாக்
விற்பனையாளர் சங்க சிறப்புத் தலைவரும்
ஏஐசிசிடியு மாநிலத் தலைவருமான கு.பாரதி தலைமை தாங்கினார்.

Owned and **Published** by **S.Balasundaram** from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by **Chennai Offset Printers**, 19/1,21/2, KitabathKhan Bahadur street, Ellis Rd, **Chennai** - 600002. **Editor G.Ramesh**